
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 9: இதழ் 11 ஒக்ரோபர் 1957 விலை சதம் : 15




## அட்டைப்படம்



பல்கலைக்கழகம் மனிதனின் எண்ணத்தையும் ஆராய்ச்சியையும் உற்பத்தி செய்யும் ஆய்கூடமாகும். இன்று மனிதவர்க்கத்தை எதிர்நோக்கியிருக்கும் பாரிய கடமையைச் செய்து முடிக்கத்தக்க தராதரத்தைப் பெறும் ஆண்களையும், பெண்களையும் உருவாக்கும் ஓர் ஆய்கூடம். புதிய உலகை உருவாக்குவதில் பல்கலைக் கழகம் எடுத்துக்கொள்ளும் பொறுப்பு மிகமிக மகத்தானது. இதனை உலக அறிஞர்கள் அனைவரும் உணர்ந்தே பல்கலைக் கழகங்களை தங்கள் தங்கள் நாடுகளில் தாபிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். உயரிய பல்கலைக் கழகத்தை உருவாக்குவதில் இங்கிலாந்து முன்னணியில் திகழ்ந்தது. ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் சர்வகலாசாலைகள் புதிய சகாப்தத்தைத் தோற்றுவிப்பதற்கு பெரிதும் உதவியிருக்கின்றன. சர்வகலாசாலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த சோவியத் அரசாங்கம் உலகிலேயே மிகப்பெரிய கட்டடத்தை மொஸ்கோ பல்கலைக்கழகத்திற்காக எழுப்பியுள்ளது. இலங்கை அரசாங்கம் இத்துறையிலிறங்கி தென்கிழக்காசியாவிலேயே சிறந்ததும், இயற்கை வனப்பு மிக்கதுமான பல்கலைக் கழகமொன்றை பேராதனையிலே தாபித்திருக்கின்றது. வருடாவருடம் இக்கழகத்திலிருந்து நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் வெளிவருகின்றனர். இவர்களெல்லோரும் புதியதோர் சகாப்தத்தை இந்நாட்டில் தோற்றுவிக்க உதவுவார்களென்பதற்கையமில்லை. அட்டைப்படத்தில் பேராதனைப் பல்கலைக் கழகக் கட்டடங்களிலொன்று தென்படுகின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சதித்திட்டங்கள் தவிடுபொடி | 3 |
| 2. | இலாபமல்ல சேவையே பிரதானம் | 4 |
| 3. | உப்புத்தொழில் விஸ்தரிப்பு | 5 |
| 4. | மாவிட்டபுரம் | 6 |
| 5. | பூலோக கற்பகதரு | 9 |
| 6. | பனை உணவு உற்பத்தி | 11 |
| 7. | கல்லோயாப்பள்ளத்தாக்கு | 12 |
| 8. | சர்வதேச புவி பௌதிக வருஷம் | 13 |
| 9. | நவராத்திரியின் பெருமை | 16 |
| 10. | பொறுமை கண்ட புருஷர் | 22 |
| 11. | காந்தியடிகளின் அன்புமார்க்கம் | 26 |
| 12. | இலங்கையில் பட்டாசு உற்பத்தி | 30 |

# சதித்திட்டங்கள் தவிடுபொடி

## பாதயாத்திரை புசுபுசுத்தது

அதிதீவிரவாதிகளுக்கும் பிற்போக்கு வாதிகளுக்கும் இந்நாட்டில் இடங்கிடையாது, மக்கள் அவர்களுக்கு எவ்வித ஆதரவும் நல்கமாட்டார்கள் என்பதைச் சென்றவாரம் நமது நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நாடெங்கும் பறையறைந்திருக்கின்றன. முதலில் கண்டியிலும் பின்னர் காலி, மாத்தறையாகிய இடங்களிலும் மக்கள் தமது கண்டனக் குரலைத் தெட்டத்தெளிவாக எழுப்பினர்கள் "கண்டிக்குக் கிளம்பிய பாதயாத்திரையும்", "மாளிகாவையில் நடைபெற இருந்த மாபெரும் கூட்டமும்" வெறும் சிரிப்புக்கிடமான புஸ்வாணங்களாகின என்றாலும், சட்ட விரோதமான பாசிச சக்திகள் கட்டவிழ்த்துவிட நினைத்த அரசியல் நிலைகள் என்ன என்பதை பொதுமக்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

வெட்கம் மானமற்ற, நேர்மைகெட்ட இச்சக்திகள் எதற்காகக் கண்டி மாநகரத்தைத் தமது திருவிளையாடல்களுக்குத் தெரிந்தெடுத்தார்கள்? இக்கண்டி நகரில் தான் ஜாதிவெறியும் மதவெறியும் தலைவிரித்தாடிய 1915 ம் ஆண்டுக் கலகங்கள் தமது மோசமானகட்டத்தை யடைந்தன. இன்றைய பிற்போக்குவாதிகளும் அவர்களது கூலிப்பட்டாளங்களும் குட்டிச் சுவராகிவிட்ட தமது செல்வாக்கைக் கண்டி நகரிலே வகுப்புக்கலவரங்களைக் கொழுந்தெரியச் செய்து, அதன் மூலம் மீண்டும் நாட்டிலே நிலைநாட்டலாம் என்று பகற்கனவுகண்டு குழப்பங்களை விளைவிப்பதற்கு முயன்றார்கள். துரோகக் கும்பல்கள் தேசத்தைச் சீர்குலைக்க வகுத்த மாபெரும் சதித்திட்டமிது. ஆனால் மக்களின் மகத்தான சக்தி விழிப்புடனிருந்ததால் இவர்களின் வெறிக்கனவுகளெல்லாம் தவிடுபொடியாகிவிட்டன. தேசவிரோத சக்திகளுக்கு கண்டிப் பொது மக்கள் கற்பித்த பாடத்தை அவர்கள் மறக்க மாட்டார்கள் என்று கருதுகிறோம்.

நமது பிரதமர் திரு. பண்டாரநாயக்கா இம் மோசக்காரர்களின் திட்டங்களின் பூரணசொரூபத்தையும் நன்கு தெரிந்துகொண்டு செயலாற்றியது அவரது திறமைக்கு நல்ல எடுத்துக்காட்டு. சிங்கம் கண்டிமாநகரைத் தனது சொந்தக் குகையென முட்டாள்த்தனமாக நினைத்துக்கொண்டு கொக்கரித்தது. பிரதமர் தீரத்துடன் இச்சிங்கத்தை எதிர்கொண்டு போராடுவதெனத் தீர்மானித்தார். பிற்போக்கு வெறியர்கள் வெற்றிபெற்றால் நாட்டுக்கு என்ன நேரிடும், எத்தகைய சீரிய இலட்சியங்கள் சிதைவுறும் என்பதை மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்தார். கண்டி நகரம் மோசக்காரர்களுக்குப் பதில் கொடுப்பதில் தனித்து நின்று போராடவில்லை. கண்டிப் பாதையிலுள்ள எல்லா நகர்களும் கிராமங்களும் அதே பதிலைத்தான் அளித்தன. பின்னர் பிரதமர் தென்மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது அவரது அறிவுரைகளைக் கேட்கவும் அவரைத் தரிசிக்கவும் முன்னெப்போதையும் விட அதிகமாகத் திரண்ட பல்லாயிரக் கணக்கான பொதுமக்களும் அதே பதிலைத்தான் அளித்தார்கள். பிரதமர் பொதுமக்களின் முன்னிலையில் உயரிய இலட்சியங்களை வைத்தார்; அவற்றைப் பாதுகாப்பதற்குத் திரண்டு நிற்குமாறு உபதேசஞ்செய்தார். சிங்கள மக்களில் மிகப் பெரும்பான்மையான மக்கள் வெற்றுக் கூச்சல்களை முற்றாகப் புறக்கணித்து சுரண்டற் கும்பல்களின் சூழ்ச்சிமிக்க திட்டங்களை நிராகரித்து விட்டார்கள் என்பதில் இப்பொழுது சிறிதும் சந்தேகத்துக்கிடமில்லை. இனவெறியையும் மதவெறியையும் கிளப்பி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்துநின்ற சதிகாரர்கள் தோற்றுவிட்டார்கள்.

"பாத யாத்திரைக்காரர்களுக்குப் பாதுகாப்பளிக்காததேன்?"—இவ்வாறு சிலர் அரசாங்கத்தின்மீது குற்றஞ்சுமத்திக் கேள்வி கேட்கிறார்கள். நாட்டுப் பிரஜைகளைப் பாதுகாப்பது நாடாள்வோரின் கடமை. அரசாங்கம் இதை நிறைவேற்றச் சிறிதும் தயங்கியதில்லை. இப்பணியை அது நாடு பூராவும் திறம்பட நிறைவேற்றியிருக்கிறதென்பதிலும் சந்தேகமில்லை. சட்டவிரோதமான சக்திகளிலிருந்து மக்களைக் காப்பாற்றுவது ஆட்சிபீடத்தின் கடமை. அது நன்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நாட்டில் நிலவிவந்த சமாதான சூழ்நிலையையும் நிம்மதியையும் சீர்குலைத்துச் சின்னாபின்னமாக்க முன்வந்த ஒரு கூட்டம், இலங்கையிலுள்ள மக்களின் அமைதியான வாழ்விற்கு ஆபத்து விளைவிக்கத் திட்டம் தீட்டிய ஒரு கூட்டம், அரசாங்கப் பாதுகாப்பைக் கோருவது விசித்திரத்திலும் விசித்திரமே. இது வெறும் குற்றச்சாட்டல்ல. பொலிசார் கண்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு முக்கிய யு. என். பிக்காரரின் காரை முற்றுகையிட்டபோது அதில் பயங்கரமான வெடிகுண்டுகள் காணப்பட்டதாக வந்த செய்தி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த யாத்திரீகர்கள் கூறும் பாதுகாப்புத்தான் என்ன? கண்டிக்குச் செல்லும் 72 மைல் நீளத்துக்கும் 500 பொலிசாரும், ஒரு காலாட் படையும் அவர்

(4 ம் பக்கம் பார்க்க)

# இலாபமல்ல சேவையே பிரதானம்

## பஸ் சேவைபற்றிப் போக்குவரத்து மந்திரி

பஸ்வண்டிச் சேவைகளைத் தேசிய மயமாக்குவது சம்பந்தமாகப் பயிற்சி பெறத்தொடங்கிய 250 அரசாங்க ஊழியர்கள் முன்னிலையில் சென்றவாரம் போக்குவரத்து பொதுவேலை மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் " தேசிய மயமாக்கப்படும் பஸ்சேவைகள் இலாபத்தை நோக்கமாகக் கொள்ளக் கூடாதெனவும் திறமையான சேவையையே தமது நோக்கமாகக் கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்." முற்காலத்து நிர்வாக முறைகள் இப்போது மாறிவருவதையும், ஊழியர்களது குரலும் உபயோகிப்பாளர்களது குரலும் மேலோங்கிவருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

" தொழிலாளர் இரக்கத்தின் பேரிலேயே வேலைக்கமர்த்தப்படுகிறார்கள்—உபயோகிப்பாளர் கிடைப்பதைக்கொண்டு திருப்திப் படவேண்டியதுதான்—என்பது போன்ற கொள்கைகளும் முதலாளிகள் நினைத்ததைச் செய்யலாம் என்ற கொள்கையும் உலகெங்கும் இப்பொழுது ஒழிந்துவருகிறது " என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது :— எம்முன்னர் இருக்கும் பணி மிகவும் பாரியது. இலங்கை முழுவதும் பரந்து கிடக்கின்ற 3,000 பஸ்வண்டிகளைப் பொறுப்பேற்று 280 000 மைல் நீள பஸ்சேவைகளை நடத்துதலும் தினசரி 10 லட்சம் பிரயாணிகளை ஏற்றிச் செல்லுதலும் அவர்களிடம் கட்டணங்களை வசூலித்துக் கணக்கு வைத்தலும் 15,000 தொழிலாளரைப் பராமரித்தலும் பாரிய வேலைகளாகும். சமீபகாலத்தில் இலங்கையின் நிர்வாகத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய நிர்வாக வேலை பஸ் சேவைகளை அரசாங்கம் எடுக்கும் இவ்வேலையே எனக்கூறின் அது பொருத்தமாகவே இருக்கும்.

" இவ்வேலை சீராக நடத்தல் உங்களைப் பொறுத்ததாகும். தேசிய மயமாக்கப்பட்டபின் பஸ்சேவைகள் சிறப்பாக இயங்குவது பெரும்பாலும் உங்களைப் பொறுத்ததேயாகும். "

" உங்களது இவ்வேலையை இலங்கை மட்டும் கவனிக்கவில்லை. முழு உலகமும் கவனிக்கிறது. ஒரு பெரிய தொழிலைத் தேசியமயமாக்கித் திறம்பட நடாத்தும் சக்தி இந்நாட்டு மக்களுக்கு இருக்கிறது என்பதை இலங்கை மக்களுக்கும் உலகமக்களுக்கும் கூட நாம் நிரூபிக்கவேண்டியிருக்கிறது ".

பயிற்சித்திட்டவிபரம் :—அரசாங்க ஊழியர்களுக்குப் போக்குவரத்துச்சபை ஏற்பாடு செய்திருக்கும் பயிற்சித்திட்டத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் இடம் பெற்றுள்ளன.

1. பஸ்கொம்பனிகளிலுள்ள நிரந்தர ஊழியர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் நிலவவேண்டிய தொடர்புகள் கட்டுப்பாடு. 2. பொதுஜனப் புகார்களும் அவற்றைப்பற்றிச் செயலாற்றுதலும். 3. சம்பளம் கொடுத்தல். 4. பஸ்போக்குவரத்துக் கட்டுப்பாடு பற்றிய கடமைகள். 5. பிரயாணச்சீட்டு முறைகள் கண்டக்டர்களுக்குப் பிரயாணச் சீட்டுகள் வழங்குதல். 6. நேர சூசிகை கட்டண சூசிகை பற்றிய வேலைகள். 7. கொம்பனிகளுக்குரிய பொருட்களைக் கையேற்றல். 8. விபத்துகள், தகவல் கொடுக்கும் கிரமமும் அவைபற்றிய நடவடிக்கைகளும். 9. சம்பள நிர்ணயசபை விதிகளும், தொழிலாளர் நஷ்டஈடும். 10. தொடர்புத்தாபனத்தின் கடமைகள்.

---

## சதித்திட்டங்கள் . . . . . . . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குப் " பாரா " போட்டு நடந்திருக்க வேண்டுமா ? அவர்களுக்குக் கால்கடுக்கும்போது, " வாருங்கள் இந்த வண்டியிலேறுங்கள் " என வாகன வசதிகள் அளித்திருக்க வேண்டுமா ?

முன்னொருபோது பிரிட்டனில் சேர் ஒஸ்வால்ட் மொஸ்லீ என்பவரின் பாசிஸ்ட் ஆதரவாளர்கள் பிரிட்டனை நாசஞ்செய்யத் திட்டம் வகுத்தபோது பிரிட்டிஷ் அரசாங்கம் அனுட்டித்த கொள்கை இங்கு நினைவுகூரத்தக்கது. பிரிட்டிஷ் உள்நாட்டு மந்திரி பிரிட்டிஷ் பொலிசாரிடம் " ரத்தக்களரியைத் தவிர்ப்பதற்கு மட்டும் தான் நீங்கள் தலையிட வேண்டும்" என உத்தரவு பிறப்பித்தார். இதைத் தான் நமது பிரதமரும் செய்தார். எந்த விதண்டாவாதத்தாலும் சட்டவிரோதிகளான இம்மோசக்காரர் கூட்டத்தை ஜனநாயக உரிமைகளைக் கோரும் சீரிய இலட்சியம்படைத்த அரசியல் கோஷ்டி என நிலை நாட்டிவிடமுடியாது.

பிற்போக்கு வாதிகள் கண்ட கனவுகள் எதுவாயிருந்தாலும் ஒரு விஷயத்தை நாம் இப்போது கூற முடியும். நமது தீவின் சரித்திரத்தில் ஒரு அத்தியாயம் முடிவடைந்துவிட்டது. பிரதமர் தீர்க்க திருஷ்டி

(8 ம் பக்கம் பார்க்க)

# உப்புத் தொழில் விஸ்தரிப்பு

### அரசாங்கத்தின் புதிய திட்டங்கள்

இலங்கையில் உப்பளத் தொழிலை மேலும் விஸ்தரித்து விருத்தி செய்யப் புதிய திட்டங்கள் பல வகுக்கப் பட்டிருக்கின்றன.

ஹம்பாந்தோட்டை உப்பளத்தில் 10 லட்சம் தொன் உப்பை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ரூபா 10 லட்சம் இதற்காகச் செலவிடப்படும்.

ஹம்பாந்தோட்டையிலுள்ள துறைமுகமும் சீர் திருத்தப்படவிருக்கிறது. உப்புற்பத்தி அதிகமாகும் போது துறைமுக ஏற்றுமதி வசதிகள் சிறப்பாக இருத்தல் வேண்டும். எனவே துறைமுகத்தை அபி விருத்தி செய்யும் விஷயம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கு மாறு உலகின் பிரபலமான ஒரு துறைமுக எஞ்சினிய ரிங் கொம்பனி கேட்கப்பட்டிருக்கிறது.

இலங்கை உப்பை வெளிநாடுகளில் விற்றல் சம்பந்த மாகவும் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டிருக் கின்றன. உப்புற்பத்தியின் அளவைப் பெருக்குவதோடு உப்பின் தரத்தை உயர்த்தவும் முயற்சி செய்யப்படும். உப்பைச் சுத்திகரிக்கும் ஒரு யந்திரமும் நிறுவப்பட இருக்கிறது.

ஜிப்சம் முதலாம் உபபொருட்களை உப்பிலிருந்து உற்பத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். காங்கேசந்துறையிலிருக்கும் சீமேந் துத் தொழிற்சாலைக்கு வேண்டிய முழு ஜிப்சத்தையும் உள்நாட்டிலேயே தேடிக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதர உபபொருட்களின் உற்பத்தி பற்றி ஒரு அமெரிக்க ரசாயன எஞ்சினியர் ஆராய்ந்து வருகிறார். அவரது பூர்வாங்க அறிக்கை உபபொருள் உற்பத்திக்குப் பேருதவியாயிருக்கும் என நம்பப்படுகிறது.

உப்பைச் சேகரிக்கும் காலத்தில் ஏறக்குறைய 4,000 தொழிலாளர்களுக்கு ஹம்பாந்தோட்டை உப்பளத்தில் வேலை கொடுக்கக்கூடியதாயிருக்கும்.

இப்பொழுது உப்பளங்களில் தொடர்ந்தாற்போல் வருடமுழுவதும் வேலை நடைபெறுவதில்லை. காலத்திற் குக் காலம் வேலை நடைபெறுகிறது. இக்காரணத்தால் இங்கு வேலை செய்யும் தொழிலாளருக்கு அளிக்கப்படும் இருப்பிட வசதிகள் மிகவும் பிற்போக்காகவும் வசதி யற்றனவாகவும் இருக்கின்றன. மேற்படி விஷயங்கள் பற்றி ஒரு உத்தியோகரீதியான ஆராய்ச்சி நடத்தப் பட்டுஅறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இவ் வறிக்கையில் அரசாங்கம் தொழிலாளருக்குச் சீர்திருந் திய இருப்பிட வசதிகளைச் செய்து தர உத்தரவு பிறப் பித்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இச்சீர்திருந்திய வீடுகள் வரிச்சுக்கட்டு முறையில் மண்ணால் அமைக்கப் படும். இம்முறை மிகவும் செலவு குறைந்த ஒரு முறை யாகும். இருப்பினும் இம் முறையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட வீடுகள் மிகவும் கவர்ச்சிகரமாகவும் வசதியாகவும் உள்ளன. செங்கல்லால் அமைக்கப்படும் வீடுகளிலும் பார்க்கப் பாதிச் செலவிலே இவ்வீடுகளை அமைக்கக் கூடியதாயிருக்கிறது.

இவ்வீடமைப்புத் திட்டத்தின் வெற்றியால் வேறு அரசாங்கப் பகுதிகளும் வரிச்சுக் கட்டு வீடுகளை அமைக்க உத்தேசித்திருக்கின்றன.

உப்பளங்களில் வேலை செய்யும் இலங்கைத் தொழி லாளர்களுக்கு வேறோர் பிரச்சினையும் இருந்து வரு கிறது. அது யாதெனில், உப்பள வேலை நடைபெறாத காலங்களில் அவர்களுக்கு வேறு வேலை தரும் பிரச்சினை யாகும். ஆகவே வழமையாகவுள்ள உப்பு விளைவுப் பருவமொழிந்த மற்றக்காலங்களிலும் உப்பைச் சேகரி க்கும் வேலை இப்பொழுது முறையாகத் தொடங்கப் பட்டிருக்கிறது. இதனால் செலவுகள் அதிகப்பட்டாலும் கூடத் தொழிலாளர் நலனுக்காக இவ் வேலையை உப்பளம் மேற் கொள்ள வேண்டியிருக்கிறது தொழிலா ளர்களுக்குக் காணிகளும் கொடுக்கப்படுகின்றன. விதை பொருட்களும் வழங்கப்படுகின்றன. இவற்றின் பலனாக அவர்கள் தமது தேவைக்கும் விற்பனைக்கும் ஏற்ற விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதா யுள்ளது. தொழிலாளர்களிடையே சேமாபிவிருத்தி வேலைகளை மேற் கொள்ளவும் தாபனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தாபனங்களில் தொழிலாளர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். பாற்பண்ணை நடாத் தல், கோழி வளர்ப்பு, முதலிய துறைகளிலும் தொழி லாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

உப்பளத் தொழிலாளர் 12 மணி நேரம் வேலை செய் பவர்கள். வாரத்தில் 7 நாள் வேலையும் அவர்களுக் குண்டு. இந்நிலை சீக்கிரத்தில் மாற்றப்படும். வாரத்துக் கொருநாள் விடுமுறையும், இதர விடுமுறைகளும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென உத்தரவிடப் பட்டிருக்கிறது.

ஹம்பாந்தோட்டையில் அதிக தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காக முன்னர் யந்திரத்தால் செய் யப்பட்ட பல வேலைகள் இப்பொழுது கைவேலையாக மாற்றப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

# மாவிட்டபுரம்

ஸ்ரீ எஸ். முருகானந்தன்

முழுமதிபோல அழகு பொலியும் வதனம் ஒன்று அமைய வேண்டிய இடத்தில், சோபையின் சாய லேயற்றுச் சுடுகாடுபோல் விளங்கும் புரவியினது விகார முகமே காணப்பட்டது.

அவளது வாழ்க்கையில் இன்பமே சூன்யமாகித் துயர் இருள்வந்து கவிந்துகொண்டது.

சேர, சோழ, பாண்டிய நாடுகளின் வட எல்லை தொட்டுத் தென் எல்லையீருக உள்ள எத்தனையோ பிரபல புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தும் அவளுடைய மறுவில் ஒரு துளிதானும் அழியப் பெற்றதா ?

யௌவன பராயம் ; அரசகுமாரி ; பட்டத்திற் குரியவள் ; இவைகளை உத்தேசித்தாவது அவள் வேண்டிய ஆண்டவர்களின் உள்ளம் உருகியிருக் கப்படாதா ? ஏதோ அவர்களுக்கு அந்தப் பாழ் மண்டபங்களுக்குள்தான் அடைபட்டு அவஸ்தைப்பட வேண்டுமென்று விதிவசம் போலும் !

இந்த இலங்கைத்தீவு ஒன்றுதான் பாக்கி. அதையும் ஒருமுறை பார்த்துவிடுவது ! ஏதோ பிரமாதமா? அதுவும் ஏக சக்கிராதிபத்தியம் செலுத்தும் ஒரு அரசன் மகளுக்கு !

இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து ஈழநாட்டினில் கால் வைத்தாளோ இல்லையோ அவள் பொன் செய்தமேனியுள் ஒரு புத்துணர்ச்சி பிரவாஹமெடுத்துப் பாயத்தொடங்கிற்று. ஸ்தலம் ஸ்தலமாகத் தரிசித்துவரும்பொழுது பூர்வ சம்பவங்கள் யாவும் கோர்வை கோர்வையாக அவள் களங்கமற்ற மனத் திரையில் ஓடத் தொடங்கின.

உலகத்தை வெறுத்த உண்மை ஞானியாக வெளிவந்த நகுல முனியைக்கூடப் பூர்வ வினை விட்டு வைக்கவில்லை. என்னசெய்தது தெரியுமா ? அவரது —களை— ஒளி பிரதிபலிக்கும் பிரகாசம் பொருந்திய முகத்தைக் கேவலம் ! கீரிமுகமாக மாற்றிவிட்டது. முற்றுந் துறந்த முனிபுங்கவனுக்கு இது எம்மட்டு ? இன்றையோ நாளையோ அழிந்துபோகும் இந்த அநித்திய ஆக்கைக்கு அழகு வேறு வேண்டியிருக்கா ?

யோக காலம் முடிந்தது. இனிமேலென்ன தீர்த்த யாத்திரைதான். அப்புறம்தான் பரலோக—சிவ லோகயாத்திரை எல்லாம் ! தமிழ்நாட்டிலுள்ள தீர்த்தங்கள் யாவையும் முடித்துக்கொண்டு ஜலதோஷம் வராமல் தப்பி வந்து சேர்ந்தார் யாழ்ப்பாணத்தில்.

யாழ்ப்பாணத்தின் வடகோடி எல்லையில் கடலை அடுத்த மேட்டுப் பிரதேசமாக ஒரு சிறிய குன்று. அந்தக் குன்றுள் தங்கிநிற்கும் ஜலம் பிரசித்தமானது. எதாவது தித்திப்பு புளிப்பு........அப்படியொன்றும் இல்லை. அதனுள் ஒருதரம் ஸ்நானம் செய்தால் சகலவிதமான பாவங்களும் கழுவுண்டு அப்பாலிருக்கும் கடலுள்போய்ச் சேர்ந்துவிடுமாம்.

இது சமாசாரம் எப்படியோ நகுலமுனியின் காதில் எட்டிவிட்டது. இனிப்புப் பதார்த்தங்களை எறும்பு அறிந்ததும் எவ்வளவு சீக்கிரமாகப் போகுமோ அதற்குப் பன்மடங்கு அதிக வேகமாய்ப் போய்ச் சேர்ந்தார் அந்தக் குன்று இருக்குமிடத்தை.

அவர் போன ரீதியையும் அவருடைய முகத்தின் விசித்திர அமைப்பையும் பார்த்த பலர் ஆச்சரியத்துடன் அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் போனதும் "ஸ்நானஉடை" அணிந்துகொண்டு நீந்தி விளையாடத் தொடங்கினரா ? போன போக்கில் குன்றுள் இறங்கி அப்படியே மூழ்கினவர்தான் சிறிது நேரங் கழித்து வேறொருவர் தண்ணீருள் இருந்து வெளியேறியதும் சனங்கள் பிரமித்துப்போயினர். அதிக சந்தேகத்துடன் "எனப்பா ! அப்போது இதற்குள் ஒரு கீரி முகம் இறங்கிச்சுதே, நீ காணவில்லையா ?" என்று கேட்டனர். முனிவருக்குப் பெருத்த சந்தேகம்—ஆச்சரியமெல்லாம் தன் பேரிலேயே கிளம்பிவிட்டது." நான்தானே அப்போது போனேன்..... என்.......என்னுடைய....... முகம்........" திரும்பித் திரும்பிப் பார்த்தார். எப்படிப் பார்ப்பது ? கடைசியாகத் தண்ணீரின் பிம்பத்தில் பார்த்ததும் இரகசியம் விளங்கிற்று" "எனய்யா நான்தானு இதற்குள் அப்போது போனது ? ....நான்தானு...... நான் ?" என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டால் அவர்கள் எப்படிப் பதில் சொல்லுவார்கள் ? அதற்குள் ஒரு குறும்புப் பையன் நின்றுவிட்டான். உடனே ஓடிப்போய் ஒரு மண்டபத்தின் சுவரில் முனிவரின் முன்னைய தோற்றத்தைச் சித்திரித்துவிட்டான். இப்பொழுது கீரிமலைச் சிவன்கோவிலில் காணப்படும் அந்தப் படம் அவன் வரைந்ததுதானே என்னவோ?

இத்தகைய மகிமை மிக்க ஸ்தலத்திற்கருகே தான் நிற்கிருர்களென்பதை அறிந்ததும் மாருதப்புரவீகவல்லிக்குத் தலை கால் தெரியாத சந்தோஷம். அவள் உள்ளத்தில் கவிந்திருந்த துயர் மேகக் கூட்டம் யாவும் நம்பிக்கைத் தென்றலால் சிறிது சிறிதாகக் கலையப்பெற்றன.



படம் : எஸ். நடராசா. கந்தரோடை

மாவிட்டபுரத் தேர்த்திருவிழாக் காட்சி

கீரிமலையை வெகு சீக்கிரம் அடையவேண்டுமென்ற ஆர்வத்தில் இடைவழியிலுள்ள அநேக ஸ்தலங்களைத் தவறவிட்டு வந்தது அவற்றின் சர்வாதிகாரிகளுக்குக் கோபமாயிருக்காதா என்ன? ஒருவர்மட்டும் அவளைச் சிறிது கவனித்துக்கொண்டார்.

ஒருதரம்; இரண்டுதரம்; மூன்றுதரம்; மூழ்கி எழுந்தும் பக்கத்திலுள்ள சிவன்கோவிலில் போய் யாது தரிசித்தும் ஏதாவது பலன்......உண்டா? அவளுடைய உருவமும் நகுலமுனியின் படத்திற்கு எதிரிலுள்ள சுவரில் சித்திரிக்கப்பெற்றதுதான். அதைப் பார்க்கும்போதெல்லாம்......ஆ! அவளுடைய ஹிருதயம் உடைந்தொழுகி......சொல்லமுடியாத வேதனையெல்லாம் உண்டாகும். ஒருபக்கம் ......கீரி முகம்......மறுபக்கம்......குதிரைமுகம்..... என்றால்......எப்படி அந்த இளம் பெண்ணின் மனம் சகிக்கும்?

அன்றிரவு அவளுக்கு மன நிம்மதியே ஏற்பட வில்லை. கடல் கடந்து இவ்வளவு தூரம் வந்தும் ஒரு பிரயோசனமுமில்லையே! இப்படியான வைரா க்ய உள்ளம் யாருக்குமிருக்குமா?

காகம், கோழி முதலிய உஷத்காலப் பட்சிகள் தங்கள் கீதங்களினால் வைகறையைச் சிறப்பித்தன. காலை நேரத்தின் குளிர்ந்த தென்றல் மாருதப் புரவீகவல்லியின் நீண்டகால உறக்கத்தை ஊடுரு விச்சென்றது.

பரபரவென்று எழுந்து அந்தக் குன்றினுள் தானே முறைப்படி ஸ்நானம் செய்துவிட்டுக் கீழ்த்திசையை நோக்கிச் சென்ற ஓர் ஒற்றையடிப்பாதை வழியாகச் சென்றாள்.

இரண்டு மைல் தூரம் கடந்ததும் ஒரு சிறிய கட்டிடம் தென்பட்டது. இல்லை, அந்தக்காலத்தில் இலங்கையில் அப்படித்தான் சைவக் கோயில்களின் அமைப்பு.

மாருதப்புரவீகவல்லி கோவிலின் மேன்வீதியில் கால் வைத்ததும் ஆலாட்சிமணி "டணர், டணர்" என்று அண்டத்தையும் பிளக்கும்படியாய் ஒலித்தது. நாதஸ்வரக்காரன் தோடி ராகத்தின் உச்சியில் ஏறினவன்தான் இறங்கிவர வழிதெரியாது ஆலாபனத்தில் ஓடி ஓடித் திரிகிறான். பாவம்!

கோயிலுள் சென்று குமரேசனின் கோலாகலத்தைக் கண்டதும் அவள் தேகம் புளகாங்கிதமடைந்தது. மூலஸ்தானத்தின் அகல் விளக்குகள் ஜெகஜ் ஜோதியாகப் பிரகாசித்தன. கோயில் பூசகர் அப்பொழுதுதான் பஞ்சஹாரத்தியை மெய்மறந்து காட்டியவண்ணம் நின்றார். அந்த அற்புத வைபவத்தில் முருகனுடைய திருமுகம் தேஜஸ் பொழிந்தது. என்றுமில்லாத அதியற்புத ஆனந்தக் களை அந்தத் திருவுருவத்தில் குமுறியது. என்? ஒரு மோஹனப் புன்சிரிப்பு என்றுஞ் சொல்லலாம். இப்படி ஒரு இளம் பெண்ணிற்கு அபார சங்கடம் நேர்ந்திருக்கிறதே என்று அனுதாபப்படாமல் புன்சிரிப்பா கொள்கிறீர். உம். ஏதோ பாரும் உமது பராக்கிரமத்தை. இன்றுடன் மட்டும் போய்விட்டதா?

மாருதப்புரவீகவல்லியின் விடா முயற்சியினாலோ, அன்று கந்தவேளின் "பெரிய வீடு வேண்டு" மென்ற பேராசையினாலோ அவள் கேட்டதை கொடுத்தே தொலைத்துவிட்டார். கேட்டது என்ன? முகம்தான். முகமா? யார் முகம்? கந்தனுடைய முகமா? அப்படியானால் வள்ளி தெய்வானை விடமாட்டார்களே!

சரி! "தன் மகள் குதிரை முகம் நீங்கி மனுஷ முகத்தைப் பெற்றாள்" என்ற செய்தி பாண்டிய மன்னனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அத்துடன் அவள் அனுப்பிய தூதும் போய்ச் சேர்ந்தது. அவ்வளவுதான். அகிலம் நடுங்கும்படியாக, யானை, குதிரை, ஒட்டகம் முதலிய மிருகங்கள் சுமக்க முடியாத பளுவைத் தூக்கி வந்தன. காலாள் முதலிய படைகள் எல்லாம் யுத்தத்திற்குப் புறப்பட்ட மாதிரிக் கிளம்பின. கடைசியாக ஒரு துறை முகத்தை வந்து அடைந்தன.

பாண்டியனுக்குத் தன் மகளை அறிந்துகொள்ள முடியவில்லை ஒருபடியாக......உடனே ஒரு வெள்ளிப் பெட்டியை அவளிடம் கொடுத்தான். அது பின்பு மேளகோஷத்துடன் எடுத்தேகப்பெற்றது. அதற்குள் இருந்தது........? வேறொன்றுமில்லை. காங்கேசனின் உயிர் பொலியும் விக்ரஹம்தான்.

"ஓகோ! அந்தச் சிலைவந்து இறங்கிய காரணத்தினால்தானோ......இப்பொழுது காங்கேசன்துறை என்ற கிராமம்......" ஆமாம்" அப்படித்தான் இருக்கவேண்டும்.

சரி, இப்படியெல்லாம்......அவளது தீராக் குறையைத் தீர்த்து வைத்த அந்தக் கந்தனுக்கு அவள் வீடு கட்டிக் கொடுத்தாளா?

அவன் விடுவானா? குதிரை முகத்தை மாற்றியவனுக்குப் பின்பு குரங்கு முகம் அமைப்பது பிரமாதமா?

அதற்குப் பயந்துதானோ என்னவோ ஒரு பிரமாண்டமான கோவிலையும் கட்டி, அந்தக்கிராமத்திற்கு ஒரு முழ நீளமுள்ள பெயரையும் கொடுத்து விட்டுப்போனான்.

மாவிட்டபுரத்தில் இருந்த காலத்தில், அவள் தனக்கென்று அமைத்த பாரிய பங்களாவும் குளமும் இப்பொழுது பாழடைந்து இருப்பதை யாவரும் காணலாம்.

---

**சதித்திட்டங்கள்....................**

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

யுடனும் தீரத்துடனும் சில இலட்சியங்களை உருவாக்கி மக்கள் முன்னிலையில் வைத்திருக்கிறார். அவை நாட்டுக்கு நல்வழிகாட்டும் நல்ல இலட்சியங்கள். இந்த இலட்சியங்களுக்கு மக்கள் மனப்பூர்வமாக அமோக ஆதரவளித்துவருகிறார்கள். அந்த அரிய இலட்சியங்களை ஒழிப்பதற்கு யாராவது முயன்றால் மக்கள் இலேசில் விடமாட்டார்கள். பிற்போக்காளர்களுக்கு மக்கள் நல்ல உதை கொடுத்திருக்கிறார்கள். இனி அவர்களால் எழுந்திருக்க முடியுமா என்பது சந்தேகமே. இருப்பினும் மக்கள் விழிப்பாயிருக்க வேண்டும். பிற்போக்காளர் மீண்டும் முயலக்கூடும். ஆனால் நிரந்தர விழிப்பால் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்.

# பூலோக-கற்பக-தரு

திரு. சு. நாகலிங்கம் எழுதியது.

தேவருலகம் பூலோகத்தின் மேற்பட்டது எதனால் என்பது அறிவீர்களா? காமதேனு-கற்பகதரு முதலியவற்றைப் பெற்றிருப்பதினாற்றான். அப்படியே பூவுலகில் இலங்காதேவியின் சிரோபாகமும்-தென்னிந்தியாவும் சிறப்புற்றிருப்பதும் கற்பகதருவைப் பெற்றிருப்பதனாற்றான். தமிழ் நூல்களுள் இரண்டடி வெண்பாவாலியன்ற திருக்குறள் உலகப் பொது நூலல்லவா? அவ்வாறே கற்பக தருவும் ஒரு இரண்டெழுத்துப் பெயரையே தாங்கி விளங்குகிறது. அதுதான் நாமெல்லாம் அறிந்தும் அறியாமலிருக்கிற பனை. பனைதான் பூவுலக மக்களின் கற்பக விருட்சம். ஆனால் பனை பூ மத்திய ரேகையை அடுத்த பாகங்களில் உண்டானபடியால் தான் அதன் பெயர் விசேடம் பெறவில்லை. மத்திய வலையப் பகுதிகளில் அது தோன்றியிருந்தால் எத்தனையோ வகைகளில் விளம்பரஞ்செய்யப்பட்டிருக்கும்.

2. இப்போதுதான் தென் கிழக்காசிய நாடுகள் விழிப்படைந்திருக்கின்றன. பனையின் பெயரும் பலவிடங்களில் எதிரொலிக்கின்றது. பழந்தமிழர் பனையைப் போற்றினர். அதனால்தான் சேரமன்னன் பனைக்கொடி தாங்கினான். அம்மட்டோ நன்னூலார் "பனைமுன் கொடிவரின்" எனச் சூத்திரமுஞ் சொல்லியிருக்கின்றாரே. இவற்றிலிருந்து நாங்கள் உணர்வது என்ன? அமிர்த கவிராயர் என்ற தமிழ்ப் புலவர் நாரையைக் கண்டபோது அதன் சொண்டை எதற்குவமித்தார்? "பனம்படு பனையின் கிழங்கு பிழந்தன்ன பவளக்கூர்வாய்ச் செங்கால் நாராய்" என்றல்லவா சொன்னார். ஆகவே பழந்தமிழ் மக்கள் பனையையும் அதன் பொருட்களையும் நன்கு உபயோகித்தனர் அன்றியும் போற்றினர் என்பது புலனாகவில்லையா? இடைக்காலத்தே ஐரோப்பிய நாகரீகம் தமிழ் மக்களின் கண்களை இறுக மூடிக்கொண்டபடியால் பனையை பெருமளவில் மறந்திருந்தனர். இப்போது திரும்பவும் பனையைப்பற்றி நினைக்கிற காலம் பிறந்திருக்கிறது. பனை பழந்தமிழர் போற்றிவைத்த சொத்து. அதனாற்றான்—பனை நட்டாயிரம் பட்டாயிரம்—என்ற பழமொழி வழங்கிவருகிறது.

3. பனை நட்ட நாடொடக்கம் பிரயோசனம். அதுவா? பட்டு அழிந்து போகும்வரை பிரயோசனம் மனிதனுக்கு அதிகம் பிரயோசனப்படுகிற மரமாயிற்றே. அதுவுமன்றி ஆடு மாடுகட்கும் உணவு கொடுக்கின்றது. அடுத்தபடியாக கிருஷிகத் தொழிலுக்கும் பசளை அளிக்கின்றது. இவ் அரும்பெரும் பலன்களையுடைய கற்பக தருவை உண்டாக்குவது தான் கஷ்டமா? அதுவுமில்லை. தண்ணீரோ—பசளையோ அதற்குத் தேவையில்லை. அதுதான் ஒன்றோ? பனை இராசபயிராயிற்றே. வேறெந்த வகைப் பயிரையும் பனையினூடே உண்டாக்கலாம். சிறியார் வருத்திய இடத்தும் தீமை செய்ய நினையாத பெரியாரைப் போன்று பனை மற்றைப் பயிர்களுக்கு எவ்வித தீங்கும் செய்ய மாட்டாது.

இப்படிப்பட்ட சிறப்பியல்புகளையுடையது பனை. அல்லாமலும் ஆல்போல் பட்ர்ந்து, அதன் நிழல் போல் பார்ப்போர்க்கு பகட்டி, ஏழைகளை உறுஞ்சுகிற இந்நாட்டுத் தேசத் தொண்டர்கள் பனையின் வாழ்வைப் பின்பற்றுவார்களா? பனை தன்னை ஒறுத்து சொற்ப இடத்திலே வளர்ந்து ஆழ வேர் போக்கி அருஞ்சுனை நீருண்டு தன் நிழலால் பிற பயிர்களுக்குத் தீமை செய்யாத சிறப்பியல்பினையுடைய தாயிற்றே. ஆனால் போக்கு வரவு வசதியற்ற அக் காலத்தில் புலவரொருவர் :—

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும்—அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகுமே"

என்று ஆலின் நிழலைப் புகழ்ந்தும்,

"தேன்படு பனையின் திரள் பழத்தொருவிதை
வானுறுவோங்கி வளம்பெற வளரினும் ஒரு
வர்க்கிருக்க நிழலாகாதே".

எனப் பனையின் நிழலை இகழ்ந்தும் பாடிவிட்டார்.

போக்கு வரவு வசதிகள் மிகுந்து—சீவிக்கவும் பயிர் செய்யவும் இடங்காணாத இந்நாட்களில் அப் புலவர் பிரான் இருந்திருந்தால் இப்பாட்டுகள் வேறு விதமாயல்லவா இசைக்கப்பட்டிருக்கும்.

4. பனம் விதைகளைப் புதைத்தால் கிழங்கு உண்டாகும். 6 மாத காலத்தில் கிழங்கு முற்றி விடுகிறது. கிழங்கிலிருந்து ஒடியலும் புழுக்கொடியலும் தயாராகின்றன. யாழ்ப்பாணம் தவிர்ந்த இலங்கையின் இதர பாகங்களில் புழுக்கொடியலுக்கிருக்கும் அபார மதிப்பென்னே? நமது சிங்களச் சகோதரர் "கொட்டைக் கிழங்கு" என்று வாயார வாழ்த்துவர். மற்றொருபுறம், "பனங்கொட்டை" எனத் தூற்றினும் தூற்றுவர். இதுவுமா, பனம் பழத்திலிருந்து உறந்து எடுக்கப்பட்ட களியை

பனுட்டாக்கி பலரும் உணவாகப் பாவிக்கிருர்கள். குடலின் துப்பரவிற்காக பலவித உப்புக்களேயும் பேதி மருந்துகளேயும் குடித்துக் கஷ்டப்படுகிறவர்களே! ஒடியல் மாவில் ஒருநாள் கூழ் காய்ச்சிக் குடியுங்கள் நாவிற்கு என்ன சுவை. குடலுக்கு எவ்வளவு துப்பரவு. அரேட்டு மா வயிற்றுளேவு காரருக்குப் பத்தியம். ஐரோப்பிய நாடுகளில் நம் நாட்டு கற்பக தரு தோன்றி இருந்தால் வயிற்ருல் போகாத வர்களுக்கு ஒடியல் மாவில் கூழ் காய்ச்சிக் குடிக்கும் படி டக்ரர் மார் "பிறிஸ்கிறிப்ஸன்" கொடுப்பார்க ளல்லவா?

5. இனி, கிழங்கு முற்றிஞல் இளம் வடலியா கின்றது. இளம் வடலியோலே விசிறி கட்டச் சிறந்தது. புழுக்க காலத்தில் அதின் உதவி பெரிது. வடலி யாகி கங்கு வைத்துவிட்டால் பிரயோசனங்கள் மிக வதிகம். கங்கு மட்டைத்தும்பிலிருந்து பலவகை யான "பிறஸ்" செய்ய முடியும். கங்கு மட்டைகள் செருப்பாகவும் உபயோகப்படத்தக்கவை. ஓலேயி லிருந்து பலவித பாத்திர பண்டங்கள் செய்யலாம். விசேடமாக பனேயின் ஓலேகள் பதநீர் குடிக் கும் புழாவாகவும் சாப்பிடும் தட்டுவமாகவும் உபயோகப்படுகின்றன. ஐரோப்பிய நாகரீகம் பிடித்தோர் பதநீரைக் கிளாசில் குடிக்கின்றனர். அது சுவைக்காது. பிழாவில் குடித்தால்தான் அதன் சுவைதெரியும். வடலியோலேயிலிருந்தும் முதுபனே யோலேயிலிருந்தும் எத்தனேயோ பொருட்கள் அப்பப்பா: உமல்-பெட்டி-கடகம்-பாய்-இறைபட்டை-வெங்காயக் கூடு இன்னுமெத்தனேயோ? பின்னல் பெட்டிகள், அழகிய தட்டுகள் இப்படியாக எத்தனே செய்யப்படலாம். பனேயோலேயிலிருந்து கடதாசிசெய் கிருர்களே: மட்டையை உரித்த நாரிலிருந்து கதி ரைகள்—நாற்காலிகள் பின்னப்படுகின்றனவே. பனே யோலேக்கு வர்ணங் காச்சிஞல் அதன் அழகு கண்ணேக் கவருகிறதே. படுக்கப் பாயும்—உண்ண உண்கலங்களும்—உணவுப் பண்டங்களும்—தட்டு முட்டுச்சாமான்களும்—ஏற்றுமதிப் பொருட்களும் பனேயிலிருந்து பெறப்படுகின்றன.

6. பனே வளர்ந்து காய் கொள்ள 20 அல்லது 25 வருடம் வரை செல்லும். காய்க்கத் தொடங்கி விட்டால் ஒரு நூற்றுருண்டு காலத்துக்கு மேல் பிரயோசனம் தந்தபடியேயிருக்கும். கொக்கரையும், மட்டையும், பன்னுடையும் விறகாக உதவுகின்றன. பனேயோலே வீடு வேயவும்—ஆடு மாடுகளுக்குச் சாப்பாடாகவும்—பசளேயாகவும்—பெட்டி குட்டான் இளேக்கவும் உபயோகப்படுகின்றது. இம்மட்டோ? பனம் பாளேயிலிருந்து ஒருவகைப் பதநீர் இறக்கப் படுகின்றது. சுண்ணும்பு சேர்க்காவிட்டால் அது "கள்" என்றும் சுண்ணும்பு சேர்த்தால் கருப்ப நீர் என்று போற்றவும்படும். எலுமிச்சம்புளி சேர்ந்த பனங்கள்ளு சின்னமுத்து—கொப்பளிப்பான்நோயா ளருக்குச் சிறந்த மருந்து. சுண்ணும்புக் கருப்பநீர் குடித்தவனுக்குத் தான் அதன் சுவை தெரியும். இந்தக் கருப்ப நீரைக் காய்ச்சி பனங்கட்டி-பனே வெல்லம்-பனங் கற்கண்டு-கல்லாக்காரம்-வெள்ளேச் சீனி பனேப்பாணி முதலியனவாகச் செய்யலாம். இவை யொவ்வொன்றும் வெவ்வேறு பதமாகக் கருப்பநீரைக் காச்சுவதால் பெறக்கூடியவை. அன்றியும் இவை சீனிக்குப் பதிலாகப் பாவிக்கப்படக் கூடியவை. உயிர்ச்சத்து மிகுந்தவை. தீமை பயக் காதவை. பனேயிலிருந்து பெறப்படும் இனிப்புக் களேப் பாவித்தால் சயரோகப் பயமில்லே. பனம்பாளே முற்றிஞல் நுங்கு ஆகும். நுங்கு சிறந்த இரச முடையது. அதன் மேற்பாகம் ஆடு மாடுகளுக்குச் சிறந்த உணவாகும். நுங்கு முற்றி காய் ஆகிப் பின் பழம் ஆகிறது. பனம் பழம் சிறந்த உணவு. உயிர்ச் சத்துக்கள் மிகுந்தது. பனம்பழத்தைப் பிசைந்து கழி எடுத்துப் பனுட்டுச் செய்வர். மேல் நாடுகளிலாஞல் இக்களி சீனியோடு கலந்து தகரங் களில் அடைக்கப்பட்டு "பல்மேரு ஜாம்" என லேபல் போடப்பட்டு கடைகளில் விற்பனவுக்கு வந்து விடும். பாணுக்குப் பூசித்தின்கிற சிறந்த இனிப்புப் பண்டமாயிருக்கும். பனுட்டு மாரிகாலத்திற்குச்சிறந்த உணவு. பனுட்டில் பனேப்பாணியைச் சிறிது சேர்த்து மிளகு சீரகம் பொடி செய்து போட்டால் பாணிப் பனுட்டாய்விடும். பாணிப்பனுட்டு பல காலத்திற்குக் கெடாமலிருக்கும். உண்பதற்கு உருசியாகவும் உடம் பிற்கு வலுவுள்ளதாகவுமிருக்கும். இப்பாணிப் பனுட்டை தகரங்களில் அடைத்தால் மேல் நாடு களில் நன்கு விற்பனே செய்யலாம். இவ்வளவு பிரயோசனங்களேயும் தருகிற பனேகளேத் தறித்தால் வீடுகட்டிக்கொள்ளலாம். இந்த வீடுகள் 1,000 வருடங் களுக்குமேல் பழுதாகாமல் இருக்கக்கூடியவை.

7. ஆகவே பனேயிலிருந்து சீவியத்திற்கு வேண் டிய உணவுப் பொருட்களேயும் விறகுகளேயும் நாங் கள் பெற்றுக் கொள்ளமுடிகிறது. வியாபாரப் பொருட்களேயும் நன்கு குடிசைக் கைத்தொழில் முறையாக உற்பத்தி செய்யமுடியும். இதுமாத்திர மல்ல சீவிப்பதற்கு வீடுகளும் கட்டிக்கொள்ள முடி கிறது. பனேயின் உற்பத்தியும்—அதன் சீவிய முறை யும் நம்நாட்டு மக்களுக்கு நல் வாழி காட்டியா யமைகின்றன. கஷ்டகாலமாயிருக்குமென எதிர் பார்க்கப்படுகிற நம் நாட்டு மக்களின் எதிர்காலம் பனேயை உண்டாக்குவதன் மூலமாகவும் அதன் பிரயோசனங்களேச் சரிவரப் பயன்படுத்திக்கொள் வதின் மூலமாகவும் சுபீட்சம் அடையலாம்.

# பனை உணவு உற்பத்தி

காந்தி சேவா சங்கக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணத்தார்களாகிய நாம் பனம் பொருட்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். இயன்றவரையில் நமது உபயோகத்துக்குப் பனம்பொருட்களை உபயோகிக்க வேண்டும். இதுதான் சுதேசி. நாம் சுதேசி தத்துவங்களைப் பேசிக்கொண்டு சாதனையில் கொள்ளாவிட்டால் அது தவருகும். நமது தலைவர்கள் என்றிருப்போர் பனம்பொருட்களைப் பற்றிப் பேசுகின்ருர்கள். பிரசாரஞ் செய்கின்ருர்கள். ஆனுல் தம் வாழ்க்கையில் கைக்கொள்வதைக் காண்பது அரிதாக இருக்கிறது. இப்படியாஞல் இந்த இயக்கம் வெற்றிபெறமுடியாது.

நமது நாட்டில் உள்ள சங்கங்களினது பிரதான கடமை பனம் பொருட்களை அபிவிருத்தி செய்வதும் உபயோகத்துக்கு எடுத்துக்கொள்வதுமாயிருக்க வேண்டும். இந்தியாவில் பனம்பொருட்களை உபயோகிப்பதற்கென்றே ஒரு இயக்கம் உண்டு. இது ஒரு சுதேசி இயக்கம். இதைவிட இந்திய அரசாங்க உணவு இலாகாவில் ஒரு தனிப்பகுதியும் உண்டு. பனம் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக, இந்தத் தனி இலாகாப் பகுதியின்கீழ் மாகாண அரசாங்கங்களில் தனித் தனி அதிகாரி இருப்பார். பல மாகாணங்களிலும் ஆராய்ச்சிகள் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. இந்தியாவில் பனை, தென்னை, ஈஞ்சு, தித்தி முதலியவற்றை நன்ருகத் தூய வழிகளில் உபயோகப்படுத்துகின்ருர்கள்.

எங்கள் நாட்டில் பனைகள்தான் அதிகம். ஆகையால் பனம்பொருட்களை உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பிரதானமாகப் பதனீர் சேர்த்துப் பனங்கட்டி உற்பத்தி செய்யலாம். இங்குள்ள சீனித் தேவையைப் பனங்கட்டியின் மூலம் பூர்த்தி செய்யலாம். **பனங்கட்டியைக்கூட ஒரு யந்திரமூலம் சீனிபோல வெண்மையாக்கலாம்.** சீனி உண்பதால் நோய் ஏற்படக் காரணமாகின்றது. பனங்கட்டி உபயோகித்தால் நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது.

நீர்வேலியிலுள்ள சர்வோதய ஆசிரமத்தில் ஒரு சனசமூக நிலையம் உண்டு. இந்த நிலைய பிரசாரத்தின் உதவியுடன் ஆசிரமத்தில் பதனீரில் இருந்து பனங்கட்டி உற்பத்திசெய்து பரிசோதனை செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க நீர்வேலியில் உற்பத்திசெய்யப்பட்ட பனங்கட்டி திறமையுடையதாகத் தெரிந்து கொள்ளப்பட்டது. கைத்தொழில் இலாகா அதிகாரி அவர்கள் ஆசிரமத்தில் உற்பத்திசெய்த பனங்கட்டியைப் பாராட்டியுள்ளார்.

ஆகையால் பனங்கட்டி உற்பத்தி அதிக பலனைக் கொடுக்கும். மது ஒழிப்பு இயக்கத்தை விரும்புவோர் இத்துறையில் முயற்சிக்காவிட்டால் அவர்களது விருப்பம் தவருனது என்பது நமது கருத்து. ஒரு கலன் கருப்பனீரில் இருந்து 2 ருத்தல் பனங்கட்டி உற்பத்தி செய்யலாம். எனவே யாழ்ப்பாணத்தில் உள்ள பனைகளை நன்குபயோகப்படுத்திஞல் பெருந் தொகையான பனங்கட்டி உற்பத்தி செய்யலாம்.

அடுத்தபடியாகப் பனங்கழியில் இருந்து பனுட்டு உற்பத்தி செய்யலாம். இந்தப் பனுட்டு உணவு தேகாரோக்கியத்துக்கு மிகவும் சிறந்தது. பனங்கழியை எடுத்துப் புளிக்காதபடி பாதுகாத்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும். "ஜாம்" என்ற உணவுக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இதைவிடச் "சொக்கிலேற்" முதலியன உற்பத்தி செய்யலாம். **இதற்கான ஆராய்ச்சி அடுத்த மாதம் தொடக்கம் நீர்வேலியிலுள்ள சர்வோதய ஆசிரமத்தில் நடைபெறவிருக்கின்றது.**

இந்த நாட்டிலுள்ள விளைபொருள் உற்பத்திச் சங்கங்கள் தம்தேசத்தில் இருக்கும் பனைகளைப் பயன்படுத்தி உற்பத்தியில் இறங்க வேண்டும். இது தொழில்வளத்தையும் மது விலக்கத்தையும் சுதேச உணர்ச்சியையும் பொருளாதாரவளத்தையும் ஒருங்கேதரும் சேவையாகும். நமது ஆலோசனைகள் அனுபவங்களை இத்துறையில் இயன்ற மட்டும் நாம் உதவத் தயாராக இருக்கிருேம்.

---

## பனை

**ஊர் ஏரி கரைதனிலே என்னிளமைப் பருவத்தில்**
**இட்ட கொட்டை**

**நீரேதும் காப்பேதும் கேளாமல் நீண்டுயர்ந்து**
**பல்லாண்டின் பின்**

**வாராய் என்று எனை ஓலை விசிறியினுல் வர**
**வேற்று நுங்கும் சாறும்**

**சீராகத் தந்ததெனிற் பனைபோலும் நட்பு முறை**
**தெரிந்தார் உண்டோ ?**

# கல்லோயாப் பள்ளத்தாக்கு

பட்டிப்பளை ஆற்றின் ஓரத்திலே,..........

" ராஜபாரதி "

**கும்மிப் பண்**

1. கல்லு மலையிலே ஊறிவழிந்து நீள்
காடுகரம்மை யெலாமளந்து—அகல
பள்ள வெளிகளாற் பாஞ்சோடி வரும்
பட்டிப்பளை ஆத்துப் பாரதிலே.........

2. கன்னங் கறுத்த எருமைக ளோடுமே,
காராம் பசுக்களும் நீராடி—அவை
தன்னிறம் மாறியே பொன்னிற மாகிடும்
தண்ணீர் வளங்கொண்ட சாரலடி......

3. தேசவளத்தைப் பெருக்கிடவே ஈழத்
தேசபிதா போட்ட திட்டமடி—நம்
ஆசிய மண்ணில் சிறந்த அணைகட்டி
ஆக்கம் அளித்திடும் பூமியடி.

4. கட்டுக் கரைகள் உடைத்துமே பாய்கிற
காட்டு வெள்ளம் கடல்கொள்ளாது—பள்ளத்
தொட்டிலிற் தேங்கவே கிட்டுமிரு மலை
ஒட்டிடவே அணை கட்டினர் காண்........

5. ஊவாமலைகளிற் பெய்யும் மழை நீரை
ஒன்ருகச் சேர்த்திடும் திட்டமடி—இதை
நாவார நாட்டினர் போற்றிப் புகழவே
நன்மை பெறுந் தொழில் ஆக்கமடி.....

6. கெட்ட விலங்குகள் வாழ் காடாய் வானம்
முட்டு மரஞ்செறி பாழ் காடாய்—ஒரு
துட்டும் பயன்கொடா வட்டாரம் விளை
பட்டின மானதும் விந்தையடி.............

7. செந்நெல் கரும்பொடு சோழன் குரக்கனும்
சேர்ந்து வளரும் கழனியடி—நம்
பண்ணை விளைவிலே பாரெல்லாம் வாழ்ந்திட
வண்ணப் பயிர் வகை செய்வமடி.........

8. பற்பல வாய்க்கால்கள் ஓடுதடி பயிர்
பச்சைப் பசேலென்று ஆடுதடி—பொருள்
விற்பனைச் சந்தையில் கல்லோயாப் பூமியின்
நற்பயன் வந்து குவியுதடி.............

9. பாலுந் தேனுங் கலந்தோடுதடி இந்த
பள்ளத் தாக்குச் செல்வந் தேடுதடி—தீவின்
நாலு திசையாலும் வந்து குடிகொள்வோர்
நாளுக்கு நாளிங்கு கூடுதடி............

வேறு

1. பற்றக் காட்ட வெட்டிக் குவிச்சிப்
பத்த வச்சாங்க—ஆத்தச்
சுற்றியுள்ள பூமி திருத்த
சித்தங் கொண்டாங்க—உழவு
சீராச் செஞ்சாங்க !

2. திட்டி வள்ளம் செப்பனிட்டு
மட்டஞ் செய்தாங்க—வீடு
கட்டுகின்ற திட்ட மொன்றை
கனவு கண்டாங்க—கொலனி
பிரித்துக் கொண்டாங்க !

3. தேடி வருவோர் குந்திக்கதைக்க
திண்ணையும் வச்சிப்—படுக்கச்
சோடியறையும் சமையல் கட்டும்
ஜோராச் செய்தாங்க—நிரைகள்
பூரா அமைத்தாங்க.

4. ஏழைமக்கள் வாழ வீடும்
ஏற்ற விதை நெல்லும்—பண்செய்
நாலு ஏக்கர் காணித் துண்டும்
நயமாக் கொடுத்தாங்க—பலபேர்
நாடி வந்தாங்க.

5. நன்செய் புரிய வந்த குடிகள்
" நாப்பது கொலனி "— நிறையப்
பஞ்ச மின்றிப் பசியுமின்றி
பயிர் வளர்க் காங்க—நாட்டில்
பணம் நிறைக் காங்க.

குடியேற்ற வாசிகளுள்
ஒரு தலைவனும், தலைவியும்
வேறு

**அவன்**

கணக்கான வீடுமுண்டு காணிசெய்யப் பூமியுண்டு
கலப்பை மாடு எல்லாமுண்டு செல்லக்கண்ணு ! நீயும்
கவலையோட ஏனிருக்கா சொல்லு கண்ணு ?

**அவள்**

பிறந்த ஊர விட்டுக்கிட்டு பெத்தவர மறந்துக்கிட்டு
பிறத்தியாரின் மத்தியில ஆசமச்சான் ! நாம
இறக்கு மட்டும் வாழலாமோ நேசமச்சான் ?

(21 ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச புவி பௌதிக வருஷம்

திரு. ஏ. பி. கந்தசாமி அவர்கள்

" கற்றது கை மண்ணளவு
கல்லாதது உலகளவு "

நாம் வசிக்கும் பூமியைப் பற்றியும் அதனைச் சூழ்ந்துள்ள அண்டத்தில் வியாபிக்கின்ற சக்திகள் பற்றியும் இது காறும் நாம் அறிந்திருப்பவை மிகச் சொற்பம். இன்னும் அறிய வேண்டியவை எவ்வளவோ உண்டு. இயற்கை நிகழ்ச்சிகளை அவதானித்து அவற்றின் காரண காரியங்கள் பற்றி ஆராய்வதையே தொழிலாய்க் கொண்ட விஞ்ஞானிகள் இந்த உண்மையை என்றும் மறந்ததில்லை. அவர்கள் தங்கள் விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்காக சாதி, மதம், இனம், கொள்கை ஆகியவற்றின் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு கூட்டுறவு முறையில் ஒத்துழைக்க முன்வரத் தயங்குவதில்லை. பூமியைப்பற்றியும் அதனைச் சூழ்ந்துள்ள அண்டத்தில் வியாபிக்கின்ற சக்திகளைப்பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் அறிய வேண்டுமானால் சர்வதேச அடிப்படையில் இணங்கிய முறையில் அவதானங்கள் உலகெங்கும் ஒரே நேரத்தில் நடத்தப்படல் வேண்டும். அப்போது தான் அவதானக் குறிப்புகளை ஒப்பு நோக்க ஏதுவாகும்.

இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன் முதல் முதலாகவும், அதன் பின் 50 வருடங்கள் கழித்து இரண்டாவது முறையாகவும் இக் கூட்டுறவு முறையில் புவிப் பௌதிக சம்பந்தமான விஷயங்களில் ஆராய்ச்சி நடத்தி இருக்கிறார்கள். இவ் இரண்டு முறைகளிலும் பூமியின் ஒரு சிறு பாகமாகிய துருவ தேசத்தின் இரகசியங்களே பிரதானமாக ஆராயப்பட்டன. அவ் ஆராய்ச்சிகளில் சில நாடுகள் மாத்திரம் ஈடுபட்டன. அவ் ஆராய்ச்சிகள் நடந்த காலங்கள் முறையே முதலாந்துருவ வருடம் என்றும் இரண்டாந்துருவ வருடமென்றும் குறிப்பிடப்பட்டன.

1957-58 டில் மூன்றும் துருவ வருடம் நடத்த வேண்டுமென ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் ஆலோசிக்கப்பட்டது. பின்னர் துருவ தேசத்தோடு மாத்திரம் மட்டுப் படுத்தாது பூமியின் எல்லாப் பாகங்களிலும் புவிப் பௌதிக ஆராய்ச்சி நடத்த வேண்டுமெனத் தீர்மானித்து அதற்கெனக் குறிப்பிட்ட காலம், இவ்வாண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி தொடக்கம் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி வரையில் உள்ள 18 மாதங்களாகும். இப் பதினெட்டு மாத காலமே சர்வதேச புவிப் பௌதிக வருஷம் என்று சொல்லப்படுவது. இக் காலத்தில் நடக்கத் தொடங்கியிருக்கும் ஆராய்ச்சிகளில் 64 தேசத்து விஞ்ஞானிகள் ஒத்துழைக்கின்றனர். இதற்கு முன் இது போல் சர்வதேச விஞ்ஞானிகளின் மாபெரும் கூட்டுறவு முயற்சி ஒன்றை உலகம் அறிந்ததில்லை. இத்தகையதொரு மாபெரும் கூட்டுறவு முயற்சி, விஞ்ஞானிகளின் சாதிமத பேதங்கள் இல்லாத, தந்நலம் கருதாத ஒத்துழைப்புக்கு, ஓர் அரிய அத்தாட்சியாகும்.

இப்பெரும் முயற்சியை சர்வதேச விஞ்ஞானிகள் மேற்கொண்டதன் நோக்கம் பூமியின் புற அமைப்பு உள் அமைப்பு அவற்றால் உண்டாகும் பௌதிக, சக்திகள், அண்டத்தில் வியாபிக்கின்ற சக்திகள், ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெருக்குவதும் பெற்ற அறிவை உலகத்தின் நல் வாழ்வுக்காக பயன் படுத்துவதுமேயாம்.

இந்தப் புவிப் பௌதிக முயற்சி வெற்றி அடையக் கூடுமென்ற நம்பிக்கைக்கு விஞ்ஞானம் அடைந்திருக்கும் முன்னேற்றங்கள் ஒரு காரணம். 25 வருடங்களுக்குமுன் இருந்ததைக் காட்டிலும் இப்போது விஞ்ஞானக் கருவிகளும், அளவு முறைகளும் எவ்வளவோ விருத்தியடைந்திருப்பதால் முன்னே செய்து கொள்ளவியலாத ஆராய்ச்சிகளை தற்காலத்தில் செய்யக் கூடியதாய் இருப்பது இன்னொரு காரணம் ஆகும். ஆகவே இயற்கை நிகழ்ச்சிகளின் மர்மங்களைப்பற்றிய அதிகமான அறிவின் அவசியமும், தற்கால கருவி சாதனவசதிகளும் சேர்ந்து சர்வதேசப் புவிப் பௌதிக வருடத் திட்டத்தை உருவாக்கக் காரணமாய் இருந்தன.

முன் குறிப்பிடப்பட்ட 18 மாத காலமாகிய சர்வதேசப் புவிப் பௌதிக வருட காலத்தில் ஆராய்ச்சிகள் நடத்தப்படும் விஷயங்கள், புவிப் பௌதிக இயலின் பகுதிகளாகிய, வளிமண்டல இயல் (Meteorology), புவிக்காந்த இயல் (Geo Magnetism), வளிமண்டல சோதியும் காந்தியும் (Auror & Air Glow) அயன்மண்டலம் (Ionosphere), சூரியனினுயிர்ப்பு (Solar Activity) அண்டக்கதிர்கள் (Cosmic Rays), நெடுங் கோடுகள், அகலக்கோடுகள் (Longitudes and latitudes), பனிக்கட்டாற்றியல் (Glaciology), சமுத்திர இயல் (Oceanography) வானங்களும் உபகோளங்களும்,

(Rockets and Satellites) புவி நடுக்கவியல் (Seismology), புவிக்கவர்ச்சி அளவியல் (Gravimetry) கருக்கதிர் வீச்சு (Nuclear Radiation) ஆகியன. இப் பகுதிகளில் சூரிய அவதானிப்பும், ஆழ்ந்த ஆராய்வும் நடைபெறும். ஒவ்வொரு தேசத்தின் திட்டங்களும் அத்தேசத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருந்த போதிலும் மற்றத் தேசங்களின் பொதுப் பயனுக்காக, தங்கள் திட்டங்களை மற்றத் தேசங்களோடு ஒத்து, ஒரே நேரத்தில், குறிக்கப்பட்ட விசேஷ அவதானங்களைச் செய்யக் கடமைப்பட்டுள்ளது.

இந்த ஜூலை மாதம் தொடக்கம் வரப்போகும் 18 மாத காலத்துக்குள் 11 வருடங்களுக்கொரு முறை உச்சத்தையடையும் சூரிய கோளத்தின் உயிர்ப்பு உச்சமடைய இருப்பதாலும், கிரகணங்கள் நிகழவிருப்பதாலும் இக்காலத்துக்குள் ஆராய்ச்சிகளை நடத்தினல் பெரும் பயன் விளையக்கூடும் என்று கருதி இப் 18 மாத காலத்தை, சர்வதேச விஞ்ஞான சங்கங்களின் ஆலோசனைச் சபை, சர்வதேசப் புவிப் பௌதிக வருடமாகத் தெரிந்தெடுத்துக்கொண்டது. இக்காலத்தில் நடத்தவேண்டிய ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்காக ஒரு விசேஷ காரியக் குழுவையும் நியமித்துள்ளது. இக்குழு உலகத்திலுள்ள சகல நாடுகளையும், ஏற்பாட்டின்படி அவதானிப்பும் ஆராய்ச்சியும் நடத்துவதற்காக தங்கள் தேசங்களில் தேசீயக் குழுக்களை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டது.

சர்வதேச புவிப் பௌதிக வருஷத்திற்கான இலங்கையின் தேசீயக் குழு இவ் வருடம் மார்ச் மாதம் உருவாக்கப்பட்டது. வளி மண்டல ஆய்வுப்பகுதி அதிபர் கலாநிதி டீ. ரீ. இ. தசநாயகா அவர்கள், 6 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கைக் குழுவின் அக்கிராசனராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இலங்கையின் தேசீயக் குழு, முன்னல் குறிப்பிட்ட பகுதிகளுள், வளி மண்டல இயல், புவி நடுக்கவியல், அயன் மண்டலம், அண்டக்கதிர்கள் ஆகிய நான்கு பகுதிகளில் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்நான்கு பகுதிகளுள் வளிமண்டல இயல், புவி நடுக்க இயல் ஆகிய இரண்டிலும் வளி மண்டல ஆய்வுப் பகுதியினரும், அயன் மண்டலம், அண்டக்கதிர்கள் ஆகிய இரண்டிலும் இலங்கைப் பல்கலைக் கழகத்தினரும் முறையே கவனம் செலுத்துவார்கள்.

ஒவ்வொரு பகுதிக்கும் அதற்குரிய தனிப்பட்ட நிகழ்ச்சி முறை இருந்த போதிலும் சர்வதேசப் புவிப் பௌதிக வருஷ விசேஷ குழுவினரால் தெரிந்தெடுக்கப்பட்ட வெவ்வேறு விஞ்ஞானப் பகுதிகள் யாவும் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்பும் பொருத்தமும் அமைந்த ஒழுங்கை உடையனவே.

புவிப் பௌதிக வருட நாட்களுள் ஒரு சில குறிப்பிடப்பட்ட நாட்களை உலக நாட்களாக (World days) பெயரிடப்பட்டுள்ளது. இந்நாட்களில் தற்காலக் கலைத்திறன் நமக்கு அளித்துள்ள சகல சாதனைகளை, வளி மண்டலத்தின் மேற்பகுதிகளைப் பற்றிய அறிவை ஒருமுகப்படுத்திப் பெருக்குவதற்கும், தற்போது தொடர்பற்றவையென்று கருதப்படும் வளிமண்டல மேற்பகுதிகளுக்கும் புவிப் பௌதிக நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பைக் காண்பதற்கும், பயன்படுத்துவார்கள்.

இனிமேல் எமது நாடு பங்கெடுத்துக் கொள்ளும் நான்கு பகுதிகளிலும் உள்ள பணித்திட்டம் பற்றி ஓரளவு கவனிப்போம் :

**வளிமண்டல வியல் :**

ஜெனிவாவில் உள்ள உலக வளி மண்டலவியல் சங்கத்தின் காரியாலயத்தினல் இலங்கையில், தெரிந்தெடுக்கப்பட்ட கொழும்பு, மன்னார், காங்கேசந்துறை, திரிகோணமலை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, நுவரேலியா ஆகிய 7 இடங்களில் உள்ள வானிலை ஆய்வு நிலையங்களில் சர்வதேச புவிப் பௌதிக வருடக் காலத்தில் சேகரிக்கப்படும் வளிமண்டலவியல் விவரங்களும், கொழும்பு, மன்னார், திரிகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் வழிகாட்டிப் புகைக் கூண்டு அவதானிப்புகள் மூலம் பெறப்படும் விவரங்களும் ஜெனிவாவில் உள்ள உலக வளி மண்டலவியல் சங்கத்தின் காரியாலயத்திற்கும் மொஸ்கோவிலுள்ள உலக விவர மத்திய பீடத்திற்கும் (World data Centere) அனுப்பப்படும். இக்காலத்தில் குறிப்பாக உலக நாட்களில் அதிகப்படியான வான்நிலையறி வானெலிக் கருவி அவதானிப்புகளும் (Radio sonde obserations), காற்றறியும் தொலை இயக்க மானி அவதானிப்புகளும் (Radar Wind Finding obserations) நடைபெறும். வான்நிலையறி வானெலிக் கருவிகளைத் தூக்கிச் செல்லும் புகைக்கூண்டுகள் ஏறக்குறைய 13 மைல் உயரத்தை அடைவதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

**அயன் மண்டலம்.**

கலாநிதி ஞானலிங்கம் அவர்களின் மேற்பார்வையில் இலங்கைப் பல்கலைக் கழக எந்திரவியல் பகுதியினரால் அயன் மண்டல அளவைகள் நடத்தப்படும். நிலைக்குத்தான படு துடிப்பு எதிரொலி (Vertical

incidence pulse echo) முறையைக் கையாண்டு அயன் மண்டல உறிஞ்சல் அளவைகள் (Ionospheric absorbtion measurements) நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. புவிப் பௌதிக வருடத்தின் போது இப்பகுதியில் சேகரிக்கப்படும் விவரங்கள் மொஸ்கோவிற்கும் இங்கிலாந்திலுள்ள "Slough" என்னுமிடத்திற்கும் அனுப்பப்படும்.

**அண்டக்கதிர்கள்.**

கலாநிதி தம்பையாபிள்ளை அவர்களின் மேற்பார்வையில் இலங்கைப் பல்கலைக்கழக பௌதிக ஆய்வுக்கூடங்களில் (Physical Laboratories) அண்டக்கதிர் அளவுகள் எடுக்கப்படும். இவற்றிற்காக அண்டக்கதிர் செறிவு பதி கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன. பதிகருவிகளுள் ஒன்று முழுக்கதிர் வீசலையும் ஏற்கக்கூடிய அகண்ட கோணத்தையுடையது. மற்றது 6 அங்குல கனமுள்ளது. ஈயக் கட்டையை ஊடுருவும் கதிர்களைப் பதிவு செய்யும், சர்வதேச புவிப் பௌதிக வருடத்திட்டப் பிரமாணத்துக்கு ஏற்றவாறு அமைய, இவ்விரு பதி கருவிகளுக்கும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 45° (பாகை) சாய்வுடன் கிழக்கு–மேற்குத் திசைகளை நோக்கும் வேறு இரண்டு பதி கருவிகளும் இயங்கும்.

**புவி நடுக்கவியல்.**

கொழும்பு அவதான நிலையத்தில் "Milne-Shaw" புவிநடுக்கம் பதி கருவி கொண்டு புவி நடுக்க அவதானங்கள் செய்யப்படும். அவதான விவரங்கள் "France" தேசத்தில் "Strausbourg" என்னும் இடத்தில் உள்ள சர்வதேச மத்திய புவி நடுக்கவியல் ஸ்தாபனத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

இலங்கையின் தேசியக்குழுவினர் கருக்கதிர் வீச்சு அவதானங்களில் ஈடுபடவில்லை என்ற போதிலும், கருக்கதிர் வீச்சைப் பற்றி இவ்விடத்தில் சில குறிப்புகள் கூறலாம் என்று எண்ணுகின்றேன். கருக்கதிர் வீச்சு 3 வகையில் உற்பத்தியாகிறது :

(1) இயற்கையாகவே காணப்படும் கிளர்மின் வீசுகின்ற துணிக்கைகளில் நின்றும் பிறப்பவை.

(2) அண்டக்கதிர்களின் மோதுகைகளினால் வளிமண்டலத்தினின்றும் பிறப்பவை.

(3) கருப் பௌதிகத் துறையில் மனிதனின் செயல்களினால் இருந்தும் பிறப்பவை. இம்மூன்று விதமான கதிர் உற்பத்திகளும் புவிப் பௌதிக இயலின் போக்குகளை ஆராய்வதற்கு பயன் படுத்தக்கூடிய இரேடியோ நியூக்கிளைடுகளைக் கொண்டுள்ளன. ஆகையால் இத்துறையில் ஈடுபடும் நாடுகள் கருக்கதிர் வீச்சு அவதானங்களைச் சேகரிப்பதன் மூலமும், சேகரித்த அவதானக் குறிப்புகளை வகுத்து ஆராய்வதன் மூலமும், புவி பௌதிக போக்கின் முக்கியமான விபரங்களைப் பெறலாம்.

இந்தத் திட்டத்திற்கும் வளிமண்டல ஆராய்ச்சித் திட்டத்திற்கும் பல தொடர்புகள் உண்டு :


(1) வளிமண்டல ஆராய்ச்சித் திட்டத்தின் நோக்கம் பிரதானமாகக் காற்றின் பொதுச் சுற்றோட்டத்தைப்பற்றித் தெளிவாக அறிவது. கருக்கதிர் வீச்சு அளவைகள் காற்றுக் கண்டங்களை வேறுபடுத்தி அறிவதற்கும் பின் தொடர்வதற்கும் பயன்படும்.

(2) காற்றிலும் படிவு வீழ்ச்சிகளிலும் உள்ள கிளர்மீன் வீசலை நிர்ணயிப்பதால் காற்றின் இரசாயனக் கலப்பைப்பற்றி திட்டமாக அறியலாம்.

(3) வளிமண்டல கருக்கதிர் வீச்சைப் பற்றி நன்கு அறிவதால் வளிமண்டல மின்சாரம் பற்றியும் நன்கு அறிந்து கொள்ளமுடியும்.

இந்தப் புவிப் பௌதிக வருஷத்தில் மிகவும் நூதனமான ஒரு சோதனை ஐக்கிய அமெரிக்க நாடுகளால் நடத்தப்படும். இந்த நூதனமான சோதனை என்ன வென்றால் ஒரு செயற்கை உபகோளத்தை பூமியைச் சுற்றிவரவிடப்போகிறார்கள். இந்த உபகோளம் 20 அங்குல விஸ்தாரமும், $21\frac{1}{2}$ இருத்தல் பாரமும் உடையது. இதற்குள் மிகவும் நுண்ணிய புவி பௌதிக இயல் கருவிகளும், வளிமண்டல இயல் கருவிகளும் அடங்கியுள்ளன. இக்கோணத்தைப் பூமியிலிருந்து 300 மைல்களுக்கு அப்பால், ஒரு மணித்தியாலத்தில் 18,000 மைல்கள் வீதம் பூமியைச் சுற்றி வரும்படி அனுப்பப்போகிறார்கள். இதை அனுப்பும் விதம் பின்வருமாறு :— இந்த உபகோளத்தை மூன்று அடுக்கு வாணத்தின் தலையில் வைத்து, முதல் வாணத்தைக் கொளுத்தி மேல் நோக்கி அனுப்புகிறார்கள். இந்த வாணம் 2 நிமிஷத்துக்குள் 40 மைல் உயரத்தை அடைந்து ஒரு மணித்தியாலத்துக்கு 3,000, 4,000 மைல் வேகமும் பெற்றுவிடும். அப்போது அதன் எரிபொருளும் செலவழிய இரண்டாவது வாணம் எரியத் தொடங்கி வேகத்தை, 11,000 மைல்கள்வீதத்திற்கு கூட்டி, 130 மைல் உயரத்தை அடையும் போது எரிந்து முடிய, 3 ம் வாணம் எரியத் தொடங்கி 300 மைல் உயரத்திற்குக் கொண்டுபோய் பூமியின் மேற் பரப்புக்குச் சமாந்தரமான திசையை நோக்கிச்சென்று, எரிந்து முடியும் தருணத்தில் அதன் தலையில் உள்ள உப கோளத்தை 18,000 மைல் வேகத்தில் அத்திசையில் செலுத்திவிடும்.

(21 ம் பக்கம் பார்க்க)



கொழும்பு இந்துக் கல்லூரியில் நவராத்திரி விழாவின் போது கலைமகள் சந்நிதியில் நடைபெற்ற நடனக் காட்சி

படம் : சி. பி. இராஜு.

# நவராத்திரியின் பெருமை

(மகேஸ்வரி மகாதேவா)

ஆண்டு தோறும் பற்பல பண்டிகைகளையும் விழாக்களையும் கொண்டாடி மகிழ்வதில் பெயர் பெற்றது பாரத நாடு. பாரத மக்கள் வாழ்வோடு சமயம் என்றுமே பிரிக்க முடியாத ஒன்றாகத் திகழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே. ஆகையினால் நாம் கொண்டாடும் பண்டிகைகளுட் பலவும் நாம் வழிபடும் கடவுளரைப் பரவுதற் பொருட்டு அமைந்திருப்பது வியப்பன்று. ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா இறைவனுக்குப் பல நாமங்கள் வைத்து நாம் வழிபடுகின்றோம். யாதொரு தெய்வம் கொளினும் அத்தெய்வமாகி ஆங்கு அவ்விறைவனே நமக்கு அருள்புரிவான் என்பது நமது கொள்கை. இறைவனின் பல்வேறு அம்சங்களென நாம் கொள்ளும் கடவுளருக்கும் நாம் விழாக் கொண்டாடி வணங்குகிறோம். இங்ஙனமாக நாம் கொண்டாடும் பண்டிகைகளுள் நவராத்திரியும் ஒன்றாகும்.

"நவராத்திரி" என்ற வடமொழிப் பதத்துக்கு ஒன்பது இரவுகள் என்பது பொருள். புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்கப் பிரதமை முதலாக உள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனப்படும். பத்தாம் நாளை விஜய தசமி என்கிறோம். இவ்வொன்பது நாட்களுள் முதல் மூன்று நாட்களில் வெற்றியை வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று

நாட்களிலும் செல்வத்தை வேண்டி இலக்குமியை யும், கடைசி மூன்று நாட்களிலும் கல்வியை வேண் டிச் சரசுவதியையும் வழிபடுகின்ருேம். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்ப வர் பிரமா, விட்டுணு, உருத்திரன் ஆகிய கடவுளர் என நம்பிய இந்துக்கள் அக்கடவுளருக்குச் சக்திகள் முறையே, சரசுவதி, இலக்குமி, பராசத்தி எனக் கொண்டனர். மிகப் பழைய காலந்தொட்டே சக்தி வழிபாடு பாரத நாட்டில் தலைசிறந்து விளங்கிற்று. வலிமை, செல்வம், கலை ஆகிய மூன்றையும் நாம் பெண்தெய்வ உருவால் வழிபடுகிருேம். ஒவ் வொரு உடம்பும் இருவேறுவகை ஒட்டுக்களோடு அமைக்கப்பட்டுள்ளதென்பதென்றும், மனித உடம்பை ஆராய்ந்தால் வலப்பாகமாகிய ஆண்பாக மும், இடப்பாகமாகிய பெண்பாகமும் ஒட்டி நிற் கின்றது எனவும் உடல் நூல் வல்லார் கூறுவர். இறைவனை அதனுலேயே “ மாதிருக்கும் பாதியாய் ” வழிபட்டனர் பாரத மக்கள். தன் சக்தியின் வலிமையால் உலகத்தைப் படைத்துக் காத்து அழிக் கும் இறைவன், உலகம் முழுவதும் ஒடுங்கும் பொழு தும் தானும் தன் தையலுமாய் நிற்பன் என நம்புகின்றனர் இந்துசமயிகள். இறைவன் தொழி லுக்கு இன்றி யமையாத சக்தியின் மூன்று அம்சங் களையுமே நவராத்திரியின் போது இந்துக்கள் வழி படுகின்றனர்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்களிலும் துர்க்காதேவிக்குப் பூசனை இயற்றப்படுகின்றது. பழங் காலம் தொட்டே கொற்றவை என்கின்ற பெண் தெய்வத்தைத் தம் வெற்றித்தெய்வமாக வழி பட்டனர் தமிழ் மக்கள். போரில் வெற்றி உண்டாக்க வேண்டுமென வீரர் அவளை வழிபட்டதாகவும், அவ ளுக்குப் பலி கொடுத்து வாழ்த்தியதாகவும் சங்கப் பாட்டுக்கள் உள. சிலப்பதிகாரத்திலே வேட்டுவவரி யிலே காணப்படும் கொற்றவையின் வருணனை சிவ னுடைய உருவ வருணனை போலவே அமைந்துள் ளது.

“ மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி
நுதல் குறித்து விழித்த விமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவள வாணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள் ”

என்றும்

கரியின் உரிவை போர்த்தவளென்றும் கொற்றவை யை வருணித்த இளங்கோவடிகள் அவளை மாம கிடற் செற்றவளென்றும், இரண்டு வேறுருவிற் றிரண்ட தோளவுணன் தலைமிசை நின்றவளென் றும், அவள் மகிடாசுரனை வதைத்ததையும் கூறு கிருர்.

உலகத்து மக்களெல்லாம் மகிழ்வோடு வாழ்வதற்கு முதன் முதலில் தேவையானது உடல் உறுதியும் வலிமையுமே. அவற்றை நமக்கு அளிப்பவள் பரா சக்தி. அவளைத் தான் நவராத்திரியின் முதன் மூன்று நாட்களிலும் வழிபடுகிருேம். இச்சக்தியை வழி படுவதினுல் வலிமையும், வீரமும், வெற்றியும், பலர் புகழும், அதனுல் இன்பம் நிறைந்த உள்ளமும் நமக்கு உண்டாகும் என நாம் நம்புகின்ருேம். வலிமையும், ஊக்கமும் அளிக்கும் பராசக்தி நமது பகையையும் பிணியையும் போக்க வல்லவள், நாம் செய்த பழைய தீவினையின் பயன்கள் மூளாது அழிந்து போகவும், எம்மைக் கவலையற்றவர்களாக வாழச் செய்யவும், நமது உடற் சோர்வையும் பிணியையும் போக்கவும் வல்ல ஆற்றல் அவளுக்கு உண்டு : அதனுலேதான் பாரதியாரும்


“ வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சல நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்தொளிரும் விளக்கே சக்தி ”

எனச் சக்தியின் புகழையும் வல்லமையையும் பாடுகிருர். சும்பன், நிசும்பன் என்று இரண்டு அசுரர்கள் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்தன ரென்றும், பராசக்தி அவ்வசுரர்களைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றினளென்றும் சிலர் கூறுவர். மகிடாசுரன் என்ற எருமை உடல் கொண்ட ஓரசுரன் தேவர்களுக்குத் தாங்கொணு இன்னல் விளைவித்தன னென்றும், தேவர்கள் தேவியிடம் சென்று முறை யிட, அவள் அவ்வசுரனைக் கொன்று தேவர்களைக் காத்தாள் என்ற கதையும் நாம் அறிந்ததே. இங்ஙனம் தேவி புரிந்த அருட்செயலின் திறத்தை வியந்து அவளைப் பரவிப் பணிவதற்காகவே நவராத்திரி கொண்டாடப்படுகிறதென்று கருதுகிருர் கள் பலரும். தனது அம்சமாகிய அட்ட லக்குமி களையும் எட்டு நாட்களுக்கும் அனுப்பி அவர்கள் தோல்வியடையவே ஒன்பதாம் நாளில் தானே சென்று மகிடாசுரனைச் சக்தி கொன்ருள் எனவும் கூறப்படுகிறது. அதனுலே அந்நாளை தேவி அம்பு தொடுத்த நாளாதலால் (மான்–அம்பு) மானம்பூ என்றும், கன்னி வாழை வெட்டும் நாளென்றும் கூறுகிருர்கள். மகிஷம் என்பது எருமை. மந்தகுண முள்ளது. ஆகவே மனிதனில் இருக்கும் சோர்வு, அறியாமை முதலியவற்றை அழித்து வெற்றி கொள்வதையே மகிஷாசுரவதம் குறிக்கும் எனக் கொள்ளல் பொருத்தமுடைத்து.

சக்தியின் அருளால் உடல்வலிமையும், ஊக்கமும் பெற்று வாழும் மனிதன் பொருளீட்டும் முயற்சியில் ஈடுபடுகிறுன். உலக இன்பங்கள் யாவற்றையும் அனுபவித்து மகிழ்வதற்குச் செல்வம் இன்றியமை யாதது. "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்ற வள்ளுவர் வாக்கும் இவ்வுண்மையையே புலப்படுத்தி நிற்கின்றது. அழகுத் தெய்வமாகவும் செல்வம் பெருக்கி வாழ்வளிக்கும் தெய்வமாகவும் விளங்குபவள் இலக்குமி. அவ்விலக்குமியை நவராத் திரியின் 4 ம், 5 ம், 6 ம், நாட்களில் வழிபடுவர் மக்கள். உலகிலே செல்வம் மலியவும், பொன்னும் மணியும் பொலியவும், காடும் கழனியும் பொழிலும் செல்வங்களை ஈன்று வளம் பெருகவும் செய்பவள் அவள். அழகு பொலியும் இடம் எல்லாம் உறையும் சிறப்புடையவள் இலக்குமி. திருப்பாற்கடலில் பிறந்தவளென்றும், செந் தாமரையில் வீற்றிருப்பவளென்றும், வீரர் தோளிலும் மன்னர் முகத்திலும், உழைப்பவர் தொழிலிலும், மங்கையர் நகைப்பிலும் மகிழ்ந் துறையும் இலக்குமி தேவியை வழிபடின், நாட்டில் செல்வம் மலிந்து வளம் சிறந்து அழகு பொலிந்து மக்கள் மகிழ்ச்சியுடன் வாழஅவள் வகை செய்வாள் என்பது மக்களின் நம்பிக்கை.

நவராத்திரியின் இறுதி மூன்று நாட்களிலும் கலைமகள் வழிபடப்படுகிருள். பொதுவாக நம் நாட்டிலே நவராத்திரியின் இறுதி நாளைச் சரஸ்வதி பூசை எனவும் வழங்குகிறோம். கலைகள் யாவற்றிற் கும் தெய்வமெனப் போற்றப்படுபவள் கலைமகள். ஆகவே கலைகள் யாவும் வளர்வதற்கு அவள் அருளை நாடி நிற்கிறோம். மணிமேகலை என்ற

நவராத்திரி தினத்தன்று கொழும்பு இந்துக்கல்லூரி மாணவச் சிறுவர் விழாவுக்கு விஜயஞ்செய்தவர்களை வரவேற்றனர்.



நூல் எழுதப்பட்ட காலத்திலே மதுரையிலே கலைமகளுக்குக் கோயில் ஒன்று இருந்ததென்பதும் "கலைநியமம்" என்ற பெயரோடு அது விளங்கிற்று என்றும்

"சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தாவிளங்கோ"


என்னும் மணிமேகலை அடிகளாற் புலனாகின்றது. கலைமகளின் அருள் பெற்றிருந்த புலவர்கள் பலருக்கு அவள் பிரத்தியட்சமாக வந்து அருள் புரிந்தாள் என்ற கதைகள் பலவும் தமிழ்நாட்டிலே வழங்கி வருகின்றன. சரஸ்வதி சங்கப்புலவராக அவதரித்தாள் என்ற கதையும் கம்பருக்கு அரசசபையிலே அரசரோடிருக்கச் சரியாசனம் அமைத்துக் கொடுத்தாள் என்றும், குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைபாடி இந்துஸ்தான் மொழியைக் கற்காமலே அறிந்து கொண்டாரென்றும் கூறப்படுவதைக் கேட்கிறோம். அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதி தேவியைக் கவிவாணரும் கலைவாணராகிய கொல்லரும், தச்சரும், சிற்பியரும், மாத்திரமன்றி மன்னரும் வேதியரும் கூட வணங்குவர். "விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் வளம்பிலுன்போற் கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே"

எனக் குமரகுருபரர் கலைமகளைப் பரவினர். உடலுறுதியும், செல்வமும் உடையவராயினும் கலைகள் இல்லாவிடில் மனிதன் வாழ்வு பூரணத்துவம் உடையதாகாது. ஆகையினாலேயே கலைச்செல்வத்தையே சிறந்த செல்வமாகமதித்து வாழ்வர் பண்புடைய மக்கள். அழகுக் கலைகள் எனக் குறிக்கப்படும் சிற்பம், சித்திரம், கீதம், நாட்டியம் முதலியன மனிதனின் உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்துவதற்குச் சாதனங்களாக உள்ளவை. உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாதது போல உள் வளர்ச்சிக்குக் கலை இன்றியமையாததாகும். சரஸ்வதியை வழிபடுவதால் கல்வியறிவும் கலைகளும் வளரும் என்ற நம்பிக்கை நம்மிடம் உண்டு. வெள்ளை ஆடை உடுத்து, வெள்ளை நிற ஆபரணங்கள் அணிந்து, வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைவாணியின் உருவம் புனிதத் தன்மையைப்புலப்படுத்தி நிற்கிறது. கையில் வீணையும் புத்தகமும் தாங்க இருப்பது அவள் கலைகளையும் அறிவையும் வளர்ப்பவள் என்றதற்கு அறிகுறியாக அமைந்துள்ளது.

இம்மூன்று பெண்தெய்வங்களாகிய, பராசக்தி. இலக்குமி, சரஸ்வதி ஆகியோரை வழிபடுவதனால் நாட்டிலே மக்கள் நலமுற்று வாழலாம். அவர்கள் மேல்நிலை எய்தலாம். வலிமையும், செல்வமும், கல்வியறிவும் பொலிய விளங்கலாம் என்ற உண்மையை நவராத்திரி விழாக் குறித்து நிற்கிறது. உலகில் மனிதனால் வேண்டற்பாலன இம்மூன்றுமே. ஆகையினாலேயே பிற விழாக்களிலும் பார்க்க நவராத்திரி விழாவுக்குத் தனிச் சிறப்புண்டு. ஒவ்வொரு இந்து சமயத்தவரின் வீட்டிலும் இவ்விழா கொண்டாடப்படுவதும் இதன் சிறப்புக்கருதியேயாகும். துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூன்று சக்திகளுக்கும் முறையே மும்மூன்று நாட்கள் வழிபாடியற்றிய பின்னர் ஒன்பதாம் நாள் ஆயுத பூசை செய்வர் இந்துமக்கள். ஒவ்வொருவரும் தம் முயற்சிக்கு ஆதாரமான பொருளைப் பூசையில் வைத்து வழிபடுவர். நுண்கலைகள் செய்வோர் தமது தொழிலுக்குரிய ஆயுதங்களையும், கல்வி கற்போர் புத்தகங்களையும் வைத்து வணங்குவர். பத்தாம் நாள் விஜய தசமி. அன்று வித்தியாரம்பம், வித்தை அறிந்தவர் அவற்றை அப்பியசித்தல் ஆயுதவித்தைகள் தொடங்குதல் எல்லாம் நடைபெறும். பண்டைக்காலத்திலே இது ஒரு வீர விழாவாகக்கொண்டாடப்பட்டதென அறிகிறோம். மற்போர் வல்லோரும், ஏனைய வீரர்களும் இத்தினத்தில் ஒன்று கூடித் தங்கள் திறமையைக் காட்டினரெனவும், கலாவிற்பன்னர்கள் தங்கள் திறமையைக் காட்டிப் பரிசு பெற்றனரெனவும் அறியக் கிடக்கிறது. இன்றும் நவராத்திரி விழாவில் சங்கீதம் நடனம் முதலியவற்றைக் கொண்ட விழாக்கள் நடப்பதையும் வீடுகள் தோறும் கலைப்பயிற்சி நடைபெறுவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழ் நாட்டிலே நவராத்திரி நாட்களில் கொலுவைக்கும் வழக்கம் காணப்படுகிறது. சகல வல்லமையும் பொருந்திய சக்தியை நடுவே வைத்து அவளைச் சுற்றி உலகிலுள்ள பொருட்களையெல்லாம் கலைத்திறம் விளங்க அடுக்கி மக்களெல்லாம் இன்பம் பெற்றுவாழ அருளும் சக்திக்கு வழிபாடு இயற்றுதலையே இக்கொலு குறித்து நிற்கிறது. இது மாத்திரமன்றி, இக்கொலுவைப்பதின் அடிப்படைக் கருத்தே சமுதாயமுன்னேற்றத்தில் அக்கறை கொண்டதாகும். கைத்தொழில் பெருகி நாட்டில் செல்வம் மலியவேண்டுமென்பதையும், அழகுக் கலைகளை அனுபவிக்கும் உள்ளம் பொருந்தியவராக மக்கள் வாழவேண்டுமென்னும் மனப்பான்மையையும் இக்கொலு வைக்கும் வழக்கம் குறிக்கிறது.

வட இந்தியாவிலே இப்பண்டிகை தசரா என்று வழங்கப்படுகிறது. போர்த் தெய்வமாகிய துர்க்கையை வழிபடுவதற்கெனக் கொண்டாடப்படும் இப்பண்டிகை



அகில இலங்கை சைவ சமயப் பரீட்சை ஆரம்பப் பிரிவில் மூன்ருவதாக வெற்றிபெற்ற செல்வன் விக்னராஜா சிவகுமாருக்கு கொழும்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. பத்மநாபன் இந்துக்கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சரஸ்வதி விழாவில் பரிசு வழங்கினர். சைவசமயப் போதகாசிரியர் திரு. செல்லையா பக்கத்தில் நிற்கிருர்.

ஆளும் சாதியினருக்கும் போர்த்தொழில் செய்வோருக்கும் பிரதானமானதெனக் கருதப்படுகிறது. சக்தி வணக்கம் சிறப்புற்று விளங்கும் வங்காளத்திலே தசராப் பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம். முதல் நாளிலே மது, கைதவன் என்ற இரு அரசரைக் கொன்ற மகா மாளி பூசிக்கப்படுகிருள். மகிஷாசுரனைக் கொன்ற மகிஷமர்த்தனி இரண்டாம் நாள்வணங்கப்படுகிருள். சண்டன், முண்டனுகிய இரு அசுரரையும்கொண்ட சாமுண்டியை 3ம் நாளில் வழிபடுகிருர்கள். ரக்த பீஜனின் உதிரத்தை உறிஞ்சி அவனை வதைத்த காளியை நான்காம் நாள் வழிபடுவர். இடையர் குல நந்தனின் மகளாகப்பிறந்த நந்தாவை ஐந்தாம் நாளிலும், ஓர் கொடிய அசுரனைப் பல்லாற் கிழித்துக் கொன்றதனுல் ரக்த தந்தி எனப் பெயர் பெற்ற தேவியை ஆரும் நாளிலும் பஞ்சத்தை ஒழித்து உலகத்தைக் காத்த சகம்பரியை 7ம் நாளிலும் வழிபடுவர். 8ம் நாளில் துர்க்கன் என்ற அசுரனைக் கொன்ற துர்க்கைக்கு வழிபாடியற்றுவர். 9ம் நாளில் அருணன் என்ற அசுரனைக் கொன்ற லப்ரமாரி வழிபடப்படுவள். சிலகாலத்துக்கு முன்பு வரை 9ம் நாளிரவிலே மிருகபலி முதலியவற்றைத் தேவிக்குக் கொடுத்து வழிபட்டனர். இந்து அரசர்கள் தசராவே தமது பகைவர் மீது படை எடுத்துச் செல்வதற்கு உகந்தநாளாகக் கொண்டனர். ஒன்பது நாளும் ஒவ்வோரிரவும் ஒவ்வொரு கன்னிப் பெண்

ணுக்கு வழிபாடியற்றும் வழக்கம் வடநாட்டிலே உள்ளது.

ஒவ்வொரு விரதத்தோடும் தொடர்பு படுத்தி ஒவ்வொரு மான்மியமும் நம் நாட்டிலே காணப்படுகிறது. அவ்விரதத்தின் சிறப்புகளையும் அதை அனுட்டிப்பதால் நாம் பெறக்கூடிய பயனையும் விளக்கி நிற்பன இம் மான்மியங்கள். நவராத்திரியின் சிறப்புப் பற்றியும் கதை யொன்று நம்நாட்டிலே வழங்கி வருகிறது. கிருத யுகத்திலே சுகேதன் என்னும் ஓரரசன் தனது அரசை இழந்து தன் மனைவியோடு காட்டுக்குச் சென்றனனும். அவன் கடவுள் பக்தி மிகக் கொண்டவன். நாட்டிலே அங்கிரசன் என்னும் ஒரு முனிவர் சுகேதனுக்கு நவராத்திரி பூசையின் சிறப்புக்களையும், அந்த நவராத்திரி விரதத்தை அனுட்டிக்க வேண்டிய முறையையும் உபதேசித்தனராம். சுகேதன் முனிவர் கூறியபடியே நவராத்திரி பூசையை பக்தியோடு செய்து தான் இழந்த அரசைத் திரும்பவும் பெற்று வாழ்ந்திருந்தனனும். அது முதலாகவே உலகத்திலே நவராத்திரிப் பண்டிகை கொண்டாடப்படுகிறதென்று கூறுகிறது நவராத்திரி மான்மியம். இக்கதையின் மூலமாக ஓர் உண்மை புலப்பட்டு நிற்கிறது. அது என்னவெனில் இழந்த அரசுரிமையைப் பெறக் கூடிய சக்தியை நமக்களிக்க வல்லது சக்தி வழிபாடு. எல்லா விதமான ஐஸ்வரியங்களையும் அடைந்து ஒருவனுக்குச் சுகவாழ்வை அளிப்பது சக்திவழிபாடு.

சக்தியைப் பலரும் பலவிதமாக வழிபடுகிருர்கள். புதுமைக் கவி பாரதியார் இவளை எப்படி வழிபட வேண்டுமென்பதைக் கூறுகிருர். முன்னேறிக் கொண்டிருக்கும் உலகத்தின் பிரதிநிதியாக விளங்குகிருர் பாரதியார். ஆகையினுலே அவர் கூற்று முற்போக்குடையதாகவே காணப்படுகிறது.

"மந்திரத்தை முணுமுணுத்தேட்டை வரிசை
யாக அடுக்கி அதன்மேல் சந்தனத்தை மலரை
யிடுவோர் சாத்திரம் இவள் பூசனை அன்ரும்"

என்கிருர்.

வீடுதோறும் கலைவிளங்கச்செய்யவேண்டும். வீடுதோறும் பள்ளிக்கூடங்கள் நிறுவவேண்டும். கல்வியில்லாத ஊரைத் தீமூட்ட வேண்டும். கலைமகளின் அருள் பெறுவதற்கு இவைதான் வழிகள் என்று கூறுகிருர். எல்லாவிதமான தானங்களினும் சிறந்தது ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற கொள்கையுடைய பாரதி கலைமகள் பணி செய்ய யாவரும் முன்வர வேண்டுமென அழைக்கிருர்.

எல்லா விழாக்களிலும் தனிச்சிறப்புடையது நவராத்திரி. மக்கள் வாழ்வுக்கு வேண்டிய வலிமையையும், செல்வத்தையும், கலைகளையும் நமக்களிக்கும் தெய்வங்களைப் போற்றுவதற்காக எழுந்த இவ் விழா மக்களுக்கு ஊக்கத்தையும் சிறப்பையும் கலையார்வத்தையும் உண்டாக்கிநிற்கிறது.

---

## சர்வதேச புவி பௌதிக வருஷம்

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிச் செலுத்தப்பட்ட கோளம் மணித்தியாலத்திற்கு 18,000 மைல் வீதம் அதாவது 1½ மணித்தியாலத்திற்கு ஒரு முறை பூமியை 300 மைல் தூரத்தில் சுற்றிவரும். வட்டமான பாதையில் விடப்பட்டாலும், இயற்கை நியதிப்படி அது நீள் வளையபாதையில் தான் சுற்றி வரும். பூமியின் மத்திய பாகங்களை மேற்கிலிருந்து கிழக்கு முகமாகச் சுற்றி வரக் கூடியதான முறையில் அனுப்பப்படும். இக் கோணம் பூமியைச் சுற்றிவரும்போது அதனுள் உள்ள கருவிகள் வழியில் நிகழும் நிலை மாற்றங்களை ஒலிப்பதிவு செய்து அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஒலி பரப்பும். இவற்றை பூமியில் இக் கோளத்தை அவதானித்துக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் வானொலி மூலம் பெற்றுக்கொள்வர்.

விஞ்ஞானிகள் தம் நலம் கருதாது, மெய் வருத்தம்பாராது இம் மாபெரும் முயற்சியில் ஈடுபட முன்வந்தது போற்றற்குரிய.து. உலகத்தின் பொது நன்மைக்காகத் தொண்டாற்றுவதில் அவர்களுக்கிருக்கும் ஆர்முவம், தங்கள் தொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவிபுரியும் என்ற நம்பிக்கையும் மனிதனுடைய கூட்டுறவின் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டுகளாகும். அவர்களுடைய முயற்சியால் உலகம் நல்வாழ்வு பெற்று சமாதானத்துடனும் நிம்மதியுடனும் எல்லோரும் இன்புற்றிருக்க வசதிகளும் வழிவகைகளும் ஏற்படுமாளுல் அவர்களுடைய தொண்டை உலகம் என்றும் பாராட்டிக் கொண்டேயிருக்கும்.

(இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்பெற்றது)

---

## கல்லோயாப் பள்ளத்தாக்கு

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

**அவன்**

வந்து குடி சேந்த நாம சொந்தக்காரர் போலக்கூடி
பந்தம் பாசம் கொண்டு வாழ்வோம் செல்லக்
கண்ணு ! பச்சை
பயிர்கள் நாட்டிப் பலன்பெறுவோம் சின்னக்கண்ணு

(31 ம் பக்கம் பார்க்க)

# பொறுமை கண்ட புருஷர்

(எம். ஸீ. எம். ஸாயிறு)

1400 வருடங்களுக்கு முன். கண்டாலும் கேட்டாலும் கருதினாலும் நெஞ்சம் அஞ்சக்கூடிய பஞ்சமா பாதகங்கள் மிஞ்சிக்கிடந்த அரேபியநாடு, தன் குடிமக்களுக்கு கொலை, களவு, குடி, சூது, கொள்ளை, பலாத்காரம், விபசாரம், பொறுமையின்றிப் பழிவாங்கல் ஆதியாம் அருண்ட குணங்களான செய்கைகள் தடையின்றிப் படையெடுக்க எவ்வளவுக்கெவ்வளவு சுதந்திரம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு சுதந்திரம் கொடுத்திருந்தது. பொல்லாக்குணங்கள் எல்லாம் நல்லாக அவர்களிடம் குடிகொண்டிருந்தாலும் பழிவாங்கல் அவைகளில் விசேடம் பெற்றிருந்தது. பொறுமை ; இது அவர்களுடைய அகராதியிலே காணக்கிடைக்காத ஒரு சொல். ஒருவன் இன்னொருவனுக்கு ஒரு தீங்கு செய்தால் அதனைப் பெருந்தன்மையுடன் பொறுப்பது தன் சுய மரியாதைக்கே, என், குடும்ப கௌரவத்துக்கே அழிவில்லா இழிவு தரக்கூடியது என்பது அவன் கொண்ட அசைக்கமுடியாத நம்பிக்கை. பொறுப்பதை அவன் பெருந்தன்மையாகக்கொள்ளவில்லை ; ஆனால் பழிவாங்கலை உடனே இறுப்பதையே அவன் பெருந்தன்மையாகக் கொண்டான். இந்த அறிவீனந்தான் அவர்களின் அறிவுக் களஞ்சியம். சாதாரண வாக்குவாதங்களிலும் "உன் மண்டையோட்டில் சாராயததை ஊற்றிக் குடிப்பேன்" என்பது அவர்கள் மத்தியில் சர்வசாதாரணமாக அடிபடும் பேச்சு. இருவருக்கிடையில் சிறுசண்டை ஏற்பட்டால் அல்லது வாக்குவாதம் நடந்தால் இறுதியில் இருபக்கத்தாரினும் இருபதுக்கு மேற்பட்டவர்களாவது கொலையுண்டு மடிவது சகஜம். இவ்வித அஞ்ஞானம் நிறைந்த அரேபியாவிலேதான், பொறுமையைக் கண்டறியாத அரேபியாவிலேதான் ஓர் உத்தம புருஷர், பொறுமையே உருவானவர், சத்திய மறையைப் பரப்ப வல்ல அல்லாஹ்வின் அருளால் அவதரித்தார்.

அவ்வுத்தம புருஷர் இத்தல வாழ்க்கையிலே எத்துணையளவு பொறுமையைக் கைக்கொண்டார் என அறிவதால் இத்தரணியே ஆச்சரியத்தில் அமிழ்கிறது. அவர்கள் பொறுமையின் பொக்கிஷமாக விளங்கினார்கள். உலக சரித்திரத்திலேயே அவர்களின் பொறுக்கும் தன்மைக்கு நெருக்கமாகக் கூடச் சான்றுகள் கிடையா. அவர்களின் பொறுமையின் பெருக்கம் மக்கள் மனதில் உருக்கத்தையே பெருக்கிக்கொண்டிருந்தது. இன்றும் என்றும் அவர்கள் வாழ்க்கையில் பொறுமையின் சின்னங்களாக ஏற்பட்ட அழியாச் சம்பவங்களை நினைந்து மக்கள் மனம் உருக்கத்தை வரித்துக்கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எம் பெருமானார் முகம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள், வறுமை வந்தபோது பொறுத்தார்கள் ; அக்கால அறியா ஜனங்களால் பொய்யன், கபடன், என்ற ஏச்சின் வீச்சுக்கு ஆளானபோதெல்லாம் பொறுத்தார்கள் ; கல்லால் அடிபட்டு அல்லல் பட்டபோதும் தம் கழுத்தில் சுருக்கிடப்பட்டு இழுக்கப் பட்டபோதும் பொறுத்தார்கள் ; அவிந்த அசுத்தங்கள், குப்பைகள் தங்கள் மீது எறியப்பட்டபோதும் பொறுத்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பட்ட இன்னல்களை நினைக்குந்தோறும் எந்தக் கல் நெஞ்சனின் மனமும் பாகாக உருகிப் பதறிக் கண்ணீர் வடிக்காமல் இருக்காது. அந்த அல்லல்களையெல்லாம் அண்ணல் அவர்கள் ஏற்றுப் பொறுத்து மன்னிக்கவும் செய்தார்கள். அவர்களின் வாழ்க்கையில் மறக்கமுடியாத சில சிறுசம்பவங்களை நாம் ஊன்றிக்கவனித்தால் அவர்களிடம் எவ்வளவு தூரத்துக்குப் பொறுமை குடிகொண்டிருந்தது என்பதைத் தெளிவாகக் காணலாம்.

ஒருசமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் தம் தோழர்களுடன் எதிரிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகாதவண்ணம் போர்க்கள எல்லையைச் சுற்றி அகழ் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது தோழர்களில் ஒருவர் முன்வந்து தம் மேற்சட்டையை நீக்கிப் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தம் வயிற்றைக் காட்டினார். அதில் ஒரு கல் வைத்துக்கட்டப்பட்டிருந்தது. அரேபிய வாசிகள் தங்களுக்கு அடக்கமுடியாத பசிவரும்போது கூன் விழாமல் கற்களை வைத்துக் கட்டிக்கொள்வது வழக்கம். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் வயிற்றைக் காட்டினார்கள். அதில் இரண்டு கற்கள் வைத்துக் கட்டப்பட்டிருந்தன. அவ்வளவு அடக்கமுடியாத பசியிருந்தும் அவர்கள் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் நினைத்திருந்தால் அனைத்தையும் பரிபாலித்து வரும் அல்லாஹ்வின் உதவிகொண்டு அளவு கடந்த செல்வம் பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் ஏழ்மையை விரும்பினார்கள். வறுமையைத் தன்பெருமையெனக் கொண்டார்கள். இஸ்லாத்துக்குச் சேவைசெய்வதையே

தேவையென நின்றார்கள். தங்கள் வீட்டுவேலை களைத் தாங்களே செய்துகொண்டார்கள்.

உலக மக்களுக்கு முன்மாதிரியாக, எல்லாம் வல்ல அல்லாஹ் தன் பரிசுத்த திருமறையில் கூறுகிறானே "உங்கள் ரசூலில் அழகான முன்மாதிரி இருக்கின்றது" என்று, அதற்குப் பரிபூரண இலக்கான வர்களாக வாழ்ந்து காட்டினார்கள். வறுமையிலும் அவர்கள் விசேஷமாகப் பொறுமையைக் கடைப் பிடித்ததை ஈண்டு நாம் காண்கின்றோம்.

சிறு வயதிலிருந்தே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அந்நாட்டு மக்களால் அருளப்பட்ட சீரிய பட்டங்கள் உண்மையானவர், சத்தியவந்தர் என்பன வாகும். ஆனால், என்று அவர்கள் இஸ்லாத்தைப் போதிக்க முற்பட்டார்களோ, என்று அவர்கள் விக்கிரக வணக்கத்தை ஒழித்துக்கட்டி, அல்லாஹ்வின் ஆணைப்படி ஏகதெய்வ வணக்கத்தை ஸ்தாபிக்க முற்பட்டார்களோ, அன்றிலிருந்து அரேபிய அறியா ஜனங்கள் உண்மையை உணரும் வரை அவர்களுக்கு அளித்த, ஆனால் அவர்களுக்குச் சற்றும் பொருந்தாத, பட்டங்கள் பொய்யன், கபடன், மந்திரக்காரன் என்பனவாகும். அப்பெயர்களை அண்ணல் அவர்கள் தப்பிதமின்றிக் காதாரக் கேட்டு அம்மக்களை எப்பொழுதேனும் சபித்தார்களா? அன்றி வெறுத்தார்களா? இல்லை. அவர்களுக்கு அறிவைப் புகட்டுமாறு வல்ல அல்லாஹ்விடம் இறைஞ்சினார்கள். பஞ்சமாபாதகர்களின் வஞ்சகச் சொற்களை அவர்கள் இஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை. பாதையில் உபாதை விளைவிக்கும் முட்களை மாதர்கள் பரப்பி, அவைகள் பெருமானார் (ஸல்) அவர்கள் காலில் தைத்து இரத்தம் வழிந்தோடுவதைக் கண்டு களிப்பார்கள், நகைப்பார்கள். பொறுமையின் உருவான நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் இதனைக் கண்டு வெகுண்டார்களா? பொறுமையை இழந்தார்களா? இல்லவே இல்லை. ஆனால் அமைதியாக அவைகளை மற்றவர்களின் கால்களில் தைக்காதவாறு தூர எறிந்துவிடுவார்கள்.

ஒருசமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் தலையிலும் திருமேனியிலும் தூசு வீசப்பட்டவர்களாக வீடுவந்துசேர்ந்தார்கள். வழியில் இரக்கமற்ற அரக்கன் ஒருவன் அவர்களின் திருமேனியில் குப்பையை எறிந்துவிட்டான். அவர்கள் நேரே வீடு நோக்கி வந்து தம் அன்புக்குரிய மகளான பாத்திமா (ரலி) அவர்கள் நீர்விட தம்மேனியைக் கழுவிச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த பாத்திமா (ரலி) அவர்கள் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்தார்கள் தங்கள் அன்புக்குரிய பிதாவின் நிலைமையைக் கண்டு. இந்த நிலையிலும் அவர்கள் பொறுமையை இழக்கவில்லை "இன்னல்லாஹ மஅஸ்ஸாபிரீன்", "அல்லாஹ் பொறுமையாளரோடு இருக்கிறான்" என்ற திருமறை கூறும் அல்லாஹ்வின் வாக்கையே அவர்கள் எக்கணமும் மக்களுக்கு உணர்த்தினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அருமையான இறை வணக்கத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்த ஒரு சமயம்; யூதனொருவன் அழுகிய ஒட்டகக் குடலை அவர்களுடைய கழுத்திலே அழுத்தமாக மாட்டி விட்டான். ஆனால் பொறுமையின் உறைவிடமான நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் அதைப்பற்றி, அவ்வருவருப்பான செய்கையைப் பற்றி ஒரு சிறிதும் கோபம் கொள்ளவில்லை. தூய்மையான அவர்கள் உள்ளம் மேன்மையான பொறுமையின் எல்லைக் கோட்டை ஒரு சிறிதும் தாண்டியதில்லை. அளவற்ற அருள், நிகரற்ற அன்பு அவர்கள் உள்ளத்தில் தெள்ளத்தெளிய பெருகியோடிய ஊற்றுக்கள். சர்வ உலகங்களையும் படைத்து, இரட்சித்துப் பாதுகாக்கின்ற வல்ல அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களில் ஒன்றான "ரஹீம்", அதாவது நிகரற்ற அன்புடையோன் என்ற திருநாமம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்குகின்றது. தன் திருநாமத்தைக் கொண்டே அண்ணல் நபி (ஸல்) அவர்களை எல்லாம் வல்ல அல்லாஹ் அழைக்கிறான் தன் ஈடிணையற்ற திருமறையாம் குர்ஆனில். அந்த நிகரற்ற அன்புக்கு ஓர் எல்லையே கிடையாது. ஆகவே அண்ணல் அவர்களின் மனதில் கருணைவெள்ளம் பெருகியதே தவிர, கருணையின் உருவான பொறுமை புகுந்ததே தவிர அதன் விலக்கு என்றுமே எட்டிப்பார்த்துக்கூட இல்லை.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நபிப்பட்டம் அருளப்பட்ட மூன்றாண்டுகளுக்குப் பின்; மக்களுக்கு இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் பறைசாற்றும்படிவல்ல அல்லாஹ்விடம் இருந்து அவர்களுக்கு அறிவித்தல் வந்தது. அப்போது அவர்கள் இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் போதிக்க முற்பட்டார்கள். அதனால் அவர்களுக்கு அல்லல் விளைவிக்க அநேகர் முற்பட்டார்கள். தன் பிறந்தகமான மக்காவில்தான் இக்கதியென்றால் பக்கத்தூரான தாயிப் நகரிலாவது போய் இஸ்லாத்தைப் பரப்பவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்பட்டது. தாயிபை நோக்கி நடந்தார்கள்; கால்கடுக்க நடந்தார்கள் அந்நகர மக்களின் நலனை நோக்கி. அங்கே அவர்கள் பிரதான குடும்பத்தில் பிறந்த மூன்று சகோதர இளைஞர்களை அணுகி, சத்திய இஸ்லாத்தின் உத்தம கோட்பாடுகளைப் போதித்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த பரிசு என்ன? "ஆண்டவன் உம்மை நபியாக

அனுப்பியிருக்கின்றுன் என்றுல் அவன் கஃபாவின் திரையைக் கிழித்துக்கொண்டிருக்கிறுன்" என்றுன் ஒருவன். மற்றவனே "ஆண்டவனுக்கு உம்மைத் தவிர நபியாக அனுப்ப வேறெவரும் கிடைக்க வில்லையா ?" என்று ஏளனமாகக் கூறிவிட்டான். "நீர் உண்மையாக நபியாயிருந்தால் உம்மோடு பேச நான் தகுதியற்றவன். அஃதன்றி நீர் பொய்ய ராக இருந்தால் உம்மோடு பேசிப் பயனில்லை" என்பது மூன்றுமவன் கொடுத்த பதில். இங்கு வெற்றி கிட்டாததைக் கண்ட பெருமானுர் (ஸல்) அவர்கள் சற்றும் தாமதிக்காமல் மக்காவைநோக்கி நடந்தார்கள். ஆனுல் அத்துஷ்டர்களோ அவ்விதம் பேசியதுமன்றி அண்ணல் நபி (ஸல்) அவர்களை கற்களால் தாக்குமாறும் நகர மக்களைத் தூண்டி விட்டனர். அல்லாஹ்வின் நபியவர்கள் எவர்களின் நலனுக்காகக் கால்கடுக்க கடுகி வந்தார்களோ, எவர் களின் நலனுக்காகக் கொதிக்கும் மணலையும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் விரைந்து வந் தார்களோ அவர்களே அண்ணல் நபி (ஸல்) அவர் களைக் கற்களால் விடாது எறிந்தனர். கற்கள் தாக்கி பெருமானுர் (ஸல்) அவர்களின் பாதங் களிலிருந்து குருதி பெருகிப் பாதரட்சைகளை நனைத் தது. வலி தாங்காத அவர்கள் சிறிது களைப்பாறக் குந்துவார்கள். ஆனுல் அப்பாவிகள் அவர்களின் தோள்களில் கைவிட்டுத் தூக்கி நிறுத்தித் திரும்ப வும் நடக்கச்செய்து கற்களால் எறிவார்கள். இவ் விதமே அப்பாதகர்கள் பெருமானுர் (ஸல்) அவர் களை மீண்டும் மீண்டும் துன்புறுத்திஞர்கள். ஆனுல் தயாபரரான, தயாளரான திருநபி (ஸல்) அவர் களின் திருவாயிலிருந்து உதிர்ந்த சொற்கள்தான் என்ன ? "அல்லாஹ் ! இந்நகர வாசிகளுக்கு நல் வழியைக் காட்டியருள் ; அவர்கள் அறியாமையில் இருக்கிறுர்கள் ; அவர்களுக்கு நல்வழியைக் காட்டி யருள்" என்பனவாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவியாரான ஆயிசா (ரலி) அவர் கள் நபியவர்களிடம், "உங்கள் வாழ்க்கையிலேயே மிகவும் கஷ்டமான கட்டம் எப்போது ஏற்பட்டது ?" என வினவிய பொழுது, பெருமானுர் அவர்கள் தாயிப் நகரில் ஏற்பட்ட இச்சம்பவத்தையே எடுத்துக் கூறினுர்கள்.

இவ்வளவு துன்பம் விளைவித்தும், தங்கள் வாழ் நாளிலே மங்காத, மறக்க முடியாத அவ்வளவு கொடூரமான துன்பம் விளைவித்தும் பெருமானுர் (ஸல்) அவர்கள் பொறுமையை இழந்தார்களா ? பொறுமையை இழந்து அம்மக்களைச் சபித்தார் களா ? இல்லவே இல்லை. அதற்கு மாருகப் பொறுமையைக் கடைப்பிடித்து அம்மக்களுக்காகப் பிரார்த்தனையும் செய்தார்கள். துன்பம் விளைவித்த வர்களுக்கு நன்மையைப் புரிந்த அவர்களின் உதார குணத்திற்கு இணையாக என்றும் எதையும் காண முடியாது. "வமா அர்ஸல்னுக்க இல்லா ரஹ்மதுல் லில் ஆலமீன்", உலக மக்களுக்கு ஓர் அருட் கொடையாகவே அன்றி நாம் உம்மை அனுப்ப வில்லை, என்ற வல்ல அல்லாஹ்வின் திருவாக்கின் பரியந்தத்துக்கே அவர்கள் வாழ்ந்து காட்டினுர் கள். ஆம் ! அவர்கள் உலக மக்களுக்கு ஓர் அருட் கொடைதான் ; ஈடிணையற்ற அருட்கொடை ; உலக சரித்திரமே காணுத, காணமுடியாத ஓர் அருட் கொடை. பொறுமையின் திறமை சோதிக்கப்பட்டு அதன் எல்லையைக் கடக்கும் அளவுக்குச் சந்தர்ப் பம் ஏற்பட்டபோதும் பொறுமையைக் கையாண்டு மக்களுக்கு அருள் சொரிந்த அவர்கள் ஓர் ஒப்பற்ற அருட்கொடைதான். அவர்கள் எங்களுக்காக, உலக மக்களுக்காக சகிக்கவொண்ணு எத்தனையோ இன்னல் களை அனுபவித்தார்கள் ; தாயிப் நகரில் கண்ட அனுபவத்தையே பொறுமையுடன் ஏற்றுர்கள் ; அவர்களுக்கு அருளும் சொரிந்தார்கள்.

உஹத் யுத்தத்திலே ஒரு மறக்க முடியாத சம்ப வம். பகைவரின் படைகள் பக்கத்தே சூழ மத்தி யில் பெருமானுர் (ஸல்) அவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். வாட்களும் விற்களும் மாரியாய்ப் பொழிந்தன. அவர்களைக் காப்பாற்றி நின்றவர் களோ சிலர். இறுதியில் பகைவனொருவன் அத் திசையில் முன்னேறிக்கொண்டுவந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களை வாளால் தாக்கினுன். அவ்வாள் அவர்களின் முகக் கவசத்தைக் கிழித்துக்கொண்டு வந்து அவர்களின் ஒரு பல்லையும் உடைத்துவிட்டது. அவர்களின் வதனத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்த அச்சமயம் தோழர்கள் அவர்களைப் பார்த்து, "நீங்கள் சபித்துவிட்டால் அல்லாஹ்வின் அருள்கொண்டு இவர்கள் மண்ணோடு மண்ணுகி விடுவார்கள் அல்லவா ?" என்று வினவினுர்கள். அப்போது பெருமானுர் (ஸல்) அவர்கள் தோழர் களைப் பார்த்து, "நான் சபிப்பதற்கு நபியாக அனுப் பப்படவில்லை" என்று பதில் பகர்ந்தார்கள். உயி ருக்கே ஆபத்தான அச்சமயத்திலும் பகைவர்கள் இஸ்லாத்தை முளையிலே சிதைத்துவிடவேண்டு மென்ற தீராப் பேராவல் கொண்டிருந்த அச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் பொறுமையை இழக்க வில்லை.

மக்கா பிடிபட்ட சமயம், மக்காவாசிகள் முஸ்லீம் களுக்குச் செய்திருந்த கடூர கொடுமைகளுக்கு, பெரு மானுர் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தால் அவர் களை உருத்தெரியாமல் நிர்மூலமாக்கியிருக்கலாம். தங்களுக்குச் செய்திருந்த தாளாத கொடுமைகளுக்

காக, அவ்வித சந்தர்ப்பத்தில் எந்த மனிதனும் மனம் புழுங்கி, பொங்கிப் பொறுமையை இழந்து பொருமுவது இயற்கை. ஆனுல் உலகுக்கே ஓர் அருட்கொடையான பெருமானுர் (ஸல்) அவர்கள் என்ன செய்தார்கள் ? பொறுத்தார்கள் ; மன்னித்தார்கள். அவர்களின் அன்புக்குரிய சிறிய பிதாவான ஹல்ரத் ஹம்சா (ரலி) அவர்களைக்கொன்ற வஹ்சி என்ற அடிமையையும் ஹம்சா (ரலி) அவர்களின் அங்கங்களை வெட்டி மாலையாக அணிந்து, ஈரலையும் மென்று துப்பிய ஹிந்தாவையும் இஸ்லாத்துக்கு இணையற்ற இடுக்கண் புரிந்த அபூஜஹலின் மகன் இக்ரிமாவையும் கூட அவர்கள் மன்னித்தார்கள். என்னே அவர்களின் உயர் பண்பு !

அண்ணல் அவர்களின் வாழ்க்கையில் பொறுமையின் அருமை சோதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களோ பலப்பல. அனைவற்றிலும் அவர்கள் வெற்றியையே கண்டார்கள். மேற்போந்த சம்பவங்களை நாம் நினைத்துப் பார்த்தால், அவர்களின் கருணைஉள்ளம் எவ்வளவு தூரத்துக்குப் பொறுக்கும் தன்மையையும் மன்னிக்கும் தன்மையையும் கொண்டிருந்தது என்பதைக் காண்கின்றோம். தாளாக் கஷ்டத்திலும் மானிடனின் இயற்கைச் சுபாவமே பொறுக்க முடியாத சந்தர்ப்பத்திலும் அவர்கள் பொறுமையையே கடைப்பிடித்தார்கள்.

எனவே அவர்களால் போதிக்கப்பட்ட, “சாந்தி, சமாதானம்” என்னும் பொருள் பொதிந்த பொறுமையை உணர்த்தும், அல்லாஹ்வால் எமக்களிக்கப்பட்ட, இஸ்லாம் மதத்தை விஸ்வாசமாகப் பின்பற்றும் நாம் அப்பொறுமையின் துவக்க வெல்லைக் கோட்டையாவது காணவேண்டும். பொறுக்கும் குணமே உருவான அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றும் எம்மிடம் அப்பொறுக்கும் குணம் எவ்வளவுக்குக் குடிகொண்டிருக்கின்றது என்பதை நினைத்துப் பார்த்தால் மனவேதனையாக இருக்கிறது. பஞ்சமாபாதகங்கள் புரிந்து கொண்டிருந்த அவ்வரேபியர்களையே பொறுக்கும் குணத்தால் புனிதர்களாக மாற்றிய அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் எம்மிடம் இன்று எவ்வளவு தூரத்துக்குப் பொறுமை நடமாடிக் கொண்டிருக்கின்றது என்பதைக் கிஞ்சித்தாவது சிந்திக்க வேண்டும். சண்டை, வாக்குவாதம், பொருமை, கபடம் ஆகிய போர்வைகளை நாம் உதறித்தள்ள வேண்டும். ஒருவன் நம்மை ஏசிவிட்டாலும் அதற்கு மறுபேச்சுப் பேசாமல் எம் மனம் சாந்தியடையாது ; அக்கொள்கையை விட்டெறிய வேண்டும். உற்றார் உறவினர்களுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும். தாய்தந்தையருடன் கோபிப்பதும் பிறரைக் கூடாத வார்த்தைகொண்டு ஏசுவதும் மற்றவர்கள் நம்மை ஏசிவிட்டால் பொறுமையை இழந்து அவர்களுடன் வாக்குவாதத்துக்குப் போவதும் இஸ்லாம் வெறுக்கும் விடயங்கள். நாம், ஒரு சிறிதாவது பெருமானுர் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைச் சிந்தித்தோமானுல் இக்குணங்கள் நம்மிடம் அணுகவே அணுகா.

எனவே அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றும் நாம் அவர்கள் காட்டிய வழிகண்டு, ஏச்சிலும் பேச்சிலும் கஷ்டத்திலும் நஷ்டத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்விலும் தாழ்விலும் வறுமையிலும் மற்றெல்லா விடயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடித்து “அல்லாஹ் பொறுமையாளரோடு இருக்கின்ருன்” என்னும் திருமறை வாக்கியத்தை உணர்ந்து நடந்தோமானுல் நிச்சயமாக நமக்கு அப்பொறுமையிலே இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபொதிந்து கிடக்கின்றது என்பதைக் கண்டுகொள்வோம்.


---

## கூட்டுறவு அபிவிருத்திச் செயற்குழுக்கள்

இந்நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு அபிவிருத்திச் செயற்குழுக் கமிட்டிகளை நிறுவும் முயற்சியில், கூட்டுறவு அபிவிருத்திக் கொமிஷனர் பகுதி தற்போது ஈடுபட்டுள்ளது. இந்தச் செயற்குழுக்களுக்கு கூட்டுறவுப் பகுதியையும் விவசாயப் பகுதியையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தலைமை தாங்குகின்றனர். இவை கிராமங்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தனவாயுமிருக்கின்றன. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பல்வேறு பலாபலன்களிலும் கிராமவாசிகள் அக்கறைகொள்ளச் செய்வதே இச் செயற்குழுக்களின் பிரதான கடமையாகும்.

இந்தக் கூட்டுறவு அபிவிருத்திச் செயற் குழுக்கள் இவ்வருடம் டிசெம்பர் மாதத்துக்குமுன் நிறுவப்பட வேண்டுமென்று விவசாய, உணவு அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள் கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்திருக்கிருர்.

இறுதியாக, இத்தீவிலுள்ள 17,000 கிராமங்களில் ஒவ்வொன்றிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுவிடும் என்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கொமிஷனர் திரு. ரீ. டி. எல். பீரிஸ் கூறினுர். தற்போதுள்ள ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைக் கிராமக் கூட்டுறவாளர்களின் உதவியுடன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றுவதற்கும் இந்த அபிவிருத்திச் செயற்குழுக்கள் உதவும்.



பாரத சுதந்திரச் சிற்பி காந்தித்தாத்தா அவர்களுக்கு ஒரு சிறுவன் வழிகாட்டும் அபூர்வக்காட்சி.

# காந்தியடிகளின் அன்பு மார்க்கம்

(திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்கள் இலங்கை வானொலியிற் பேசியது)

இன்று காந்தியடிகளின் பிறந்த நாள். பாரத நாட்டின் 40 கோடி மக்களுக்கும், உலக இந்து மத மக்களுக்கும் ஒரு அவதார புருஷர்; உலகத்திற்கு ஒரு பெரியார்; இந்தப் பெரியார் பிறந்த நாளை ஒரு புண்ணிய நாளாய் நாமெல்லோரும் கருதவேண்டும். இந்தப் பெரியோரைத் தீர்க்க தரிசியென்றும், பாரத சுதந்திரச் சிருஷ்டிகர்த்தா என்றும், மகாத்மா என்றும், பாபுஜீ யென்றும், அகிம்சையின் அவதாரம் என்றும் பலப்பல சிறந்த நாமங்களால் அழைக்கிறோம். இவர் உலகிற்கு அகிம்சையைப் பற்றியும், சத்தியாக்கிரகத்தைப் பற்றியும், உண்மையின் உயர்வைப் பற்றியும் அன்பைப் பற்றியும் கூறியிருக்கிறார்; அதன்படி ஒழுகியிருக்கிறார்.

காந்தியடிகளைப் பற்றி நாம் இன்று எடுத்துக் கொண்ட அம்சம் அவருடைய அன்பு மார்க்கமாகும். அன்பு உலகிற்கு ஒரு புதிய வஸ்துவல்ல. பல நூற்றாண்டுகளாக உலகின் பல பாகங்களிலும் அன்பைப் பற்றி பல பெரியார்களும், ஞானிகளும் உபதேசம் செய்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் அன்பைச் சமயத்திலும் வாழ்க்கையிலும், சீரிய குணமாகப் புகுத்தினார்கள். ஆனால் காந்தியடிகளுக்கு முன்பு அன்பை அரசியல் துறையில் அசோகனை விட ஒருவரும் புகுத்தவில்லை. அரசியல் துறையில் உண்மைக்கும் அன்புக்கும் அவ்வளவு இடமில்லையென்பது தான் உலகத்தின் பொது அபிப்பிராயம். ஆனால் காந்தியடிகள் அன்பைப் பல துறைகளிற் கடைப்பிடித்

தாலும் சிறப்பாக அதை அரசியல் துறையிலும் பாவிக்கலாம் என்று உலகிற்கு நிரூபித்திருக்கிறார்.

அதிகாரத்தில் அதிகம் நம்பிக்கை இல்லை காந்தியடிகளுக்கு. ஆனால் அதிகாரத்தையும் அன்பின் மார்க்கத்தால் செலுத்தலாம் என்று கூறுவார். அரசனுக்கும் குடிகளுக்குமிடையே அன்பே அடிப்படையாக இருக்க வேண்டும். அரசாங்கத்தின் சகல துறைகளிலும் அன்பே ஆளும் நியதியாக இருக்க வேண்டும் என்றும், அத்தகையதொரு அன்பின் ஆட்சியே இந்தியாவிற்குத் தேவை என்றும் காந்தியடிகள் பல சந்தர்ப்பங்களிற் கூறியிருக்கிறார். இதைத்தான் அடிகள் "இராமராச்சியம்" என்று கூறி வந்தார்.

அரசியல் துறையில் ஈடுபட முன்பே காந்தியடிகள் அன்பு மார்க்கத்தைக் கையாளத் தொடங்கிவிட்டார். ஆபிரிக்காவில் வசிக்கும் காலத்தில் இடையிடையே இதைக் காணக்கூடியதாயிருந்தது. தாயகம் திரும்பியதும் சில தோழர்களோடும் அன்பர்களோடும் ஒரு ஆச்சிரமத்தைத் தாபித்தார். 1915 ம் வருடம் மே மாதம் 25 ம் திகதி அகமதபாத்தில் காந்திஜீ சத்தியாக்கிரக ஆச்சிரமத்தைத் தொடங்கினார். ஆசிரமத்தில் வசிப்பவர்களாக அநுமதிக்கப்பட்டவர்களில் காந்திஜியின் மனைவியார் கஸ்தூரிபாயும் ஒருவராவர். இவ்வாச்சிரமத்தில் தன்னுடைய இலட்சியங்களுக்கும் கொள்கைகளுக்குமிணங்க சில ஹரிஜனங்களையும் வசிக்கச் செய்தார். ஆச்சிரமம் அமைந்திருந்த வீட்டுக்கருகில் இன்னொரு இல்லம் இருந்தது. இவ்விரு இல்லங்களுக்கும் பங்காக ஒரு கிணறு இருந்தது. ஹரிஜனங்கள் கிணற்றில் தண்ணீர் அள்ளும் பொழுது அடுத்த இல்லத்தின் அன்பர்கள் நிந்திக்க ஆரம்பித்துவிடுவார்கள். இதை அடிகளுக்கு முறையிட்ட பொழுது எல்லாவற்றையும் பொறுமையுடன் சகிக்கும்படி சொன்னார். அத்தோடு அவர்களுடன் அன்பாக நடக்கும்படி புத்திமதியும் கூறினார். அடிகள்மேல் மிகுந்த விசுவாசமுடையவராய் இருந்தபடியால், ஹரிஜனங்கள் சண்டை சச்சரவில்லாமல் தண்ணீர் அள்ளி வந்தனர். நாளடைவில் அடுத்த இல்லத்தோர் நிந்திப்பதை நிறுத்திவிட்டார்கள். சொற்ப காலத்தில் அடிகளின் கொள்கைகளிலும் நம்பிக்கை உள்ளவர்களாய் மாறிவிட்டார்கள். சகிப்புத் தன்மையினாலும், பொறுமையினாலும் மக்கள் உள்ளத்தைப் பிணக்கும் அன்பு மார்க்கத்தின் முதல் வெற்றியாக இந்நிகழ்ச்சியைக் கூறலாம்.

அன்பு மார்க்கத்தின் சக்தியைக் காட்டும் இன்னுமொரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும். சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக காந்திஜி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இங்கே தான் செய்த செய்கையால் நீதிபதிக்குச் சிரமம் கொடுத்துவிட்டதற்கு வருந்தினார். தண்டனை விதித்தபின்பு நீதிபதிக்கு மிகவும் அன்பு காட்டினார். வெள்ளைக்கார நீதிபதிக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. இதற்குப் பிறகு காந்தியடிகளுக்கு எதிரா்க வரும் வழக்குகளை விசாரிப்பதற்கு நீதிபதிகள் பின்னிற்பார்கள். ஏன்.. ? தண்டனை விதித்தபிறகும் அன்புடன் நடந்ததால் வெள்ளைக்கார நீதிபதி மனச்சாட்சிக்கு அஞ்சினார்.

காந்தியடிகளின் அன்பு மார்க்கத்தை விளக்கும் சம்பவம் ஒன்றை காலஞ் சென்ற ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார். 1926 ம் ஆண்டு காந்தியடிகள் கோயம்புத்தூருக்கு விஜயஞ் செய்தபோது இது நடந்ததாம். அடிகள் தெருவில் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது எண்ணெய் விற்கும் எளிய மனிதன் ஒருவன் தோள் மேல் தாங்கிய ஒரு மூங்கிலின் இரு முனையிலும் தொங்கிக் கொண்டிருக்கும் இரண்டு எண்ணெய்த் தகரங்களைச் சுமந்து கொண்டு போய்க்கொண்டிருந்தானும். எதிரில் ஒரு பொலிஸ் கூட்டம் ஓட்டமாய் வந்து கொண்டிருந்தது. எண்ணெய்க்காரன் தெருவின் மத்தியில் போய்க்கொண்டிருக்கவே ஒரு பொலிஸ்காரன் ஓடிவந்த வேகத்தில் அவனைத் தாக்கித் தள்ளிவிட்டுப் போனான். எண்ணெய்க்காரனும் கீழே விழுந்தான். தகரங்களில் இருந்த எண்ணெய் சிந்தப்பட்டது. பொலிஸ் கூட்டத்திலுள்ள எவரும் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. சிலர் எண்ணெய்க்காரனைப் பார்த்துச் சிரித்துப் பரிகாசமுஞ் செய்தனர். இவை யாவற்றையுங் கண்ட மகாத்மா எண்ணெய்க்காரனைக் கோயம்புத்தூரில் தான் இருந்த இல்லத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார். போனதும் திரு. ஆர். கே. சண்முகஞ் செட்டியாரை எண்ணெய்க்காரனை பொலிஸ் மேலதிகாரிகளிடம் கூட்டிப் போய் பொலிசார் இதற்காக மன்னிப்புக் கேட்கும்படியும் எண்ணெய்க்கு நட்ட ஈடு வாங்கிக்கொடுக்கும்படியும் சொன்னார். அவ்வூர் பொலிஸ் மேலதிகாரி ஒரு முரட்டு வெள்ளைக்காரன். திரு. செட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்க மனமில்லாதவனாய் ஒரு வழியாய் மகாத்மாவைப் பார்க்க உடன்பட்டான். காந்தியடிகளிடம் 10 நிமிடங்கள், வாதாடியதும் வெள்ளைக்கார அதிகாரி எண்ணெய்க்காரனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதுமல்லாமல் எண்ணெயின் விலையைத் தாமே கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். அன்பு மார்க்கத்தின் பலனை நேரில் கண்டேன் என்கிறார் திரு. செட்டியார்.




காந்தியடிகள் விட்டுச் சென்ற செல்வம். பாரதநாடு இவற்றை விலைமதித்தற்கரிய செல்வமாகப் பேணிப் பாதுகாத்துவருகிறது.

தமது முறையைச் சீடர்களுக்கு நன்கு போதித்து வந்தார். போதனையில் மாத்திரமல்ல, சாதனையிலும் காட்டினார். அவர்களும் இம்முறையைக் கையாளத் தொடங்கினார்கள். பாருங்கள் என்ன விதமாக பாபு இராசேந்திரா பிரசாத் பிகாரில் இம்முறையைக் கையாண்டாரென்று. ஏதோவொரு தெருவால் மக்கள் கூட்டமாகப் போகக்கூடாதென்று பிகாரில் ஒரு நகரத்தின் சட்டம் பிறந்தது. இந்தச் சட்டத்தை மறுப்பதற்குப் பிகார் காங்கிரஸ் நிச்சயித்தது. அக்காலத்தில் பிகார் காங்கிரஸ் தலைவர் தற்போதைய பாரத ராஷ்டிரபதி சட்டத்தை மறுத்து மக்கள் கூட்டமாக இதே தெருவால் போனார்கள். பொலிஸார் வழக்கம் போல் மக்களைத் தாக்கினார்கள். சில காலமாக இப்படி நடந்து வந்தது. இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் பொழுது கிறிஸ்தவ சமய விடுமுறை நாள் ஒன்று வந்தது. கிறிஸ்தவர்களாய் இருந்த பிரிட்ஷ் அதிகாரிகளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இந்தத் தினத்தில் மக்களைத் தாக்குவதாவென்று திகைத்தார்கள். இந்த அதிகாரிகளுக்கு அன்பான கடிதமொன்று எழுதினார் இராசேந்திரபிரசாத். "தாங்கள் இந்த திவ்விய தினத்தில் எங்களைத தாக்கி கஷ்டப்படுத்துவதை நாம் விரும்பவில்லை. சட்டவிரோதத்தை இந்த நாள் கழிந்ததும் தொடர்ந்து நடத்துவோம்" என்று அறிவித்தார். இக்கடிதத்தை வாசித்ததும் அதிகாரிகள் மனங்கலங்கினார்கள். அடிக்கு மறுமொழி அன்பா...? காந்தியடிகளின் புதிய அன்பு மார்க்கம் இந்த அதிகாரிகளை வேரோடு அசைத்துவிட்டது. தங்களுக்கு இந்நிலையில் கடமை செய்ய முடியவில்லையென்று அரசாங்கத்திற்கு அறிவித்து, வேலை மாறிப்போய் விட்டார்கள். என்னே அன்பு மார்க்கம்; இரத்த வெறிபிடித்தவர்களை மான் போல் மிருதுவாக மாற்றி விட்டது.

இராசேந்திர பிரசாத் போல மற்ற காந்தியடிகளின் குழுவில் உள்ளோர் தங்கள் பல கடமைகளிலும் அன்பிற்கு ஒரு முக்கிய இடம் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த அன்பு ஒளி விளக்கு, ஒரு விளக்காக ஆரம்பித்து பல விளக்குகளாக மாறி பரத கண்டம் முழுதும் ஒளி வீசத் தொடங்கிவிட்டது. இதுவே இந்தியா உலகிற்கு அளிக்கும் தத்துவம்.

இந்தத் தத்துவத்தை அடங்கி ஒடுங்கியிருந்த இந்திய மக்களுக்கு சுதந்திர வெற்றி கொடுக்கக் கூடிய ஒரு கருவியாய் காந்தியடிகள் கருதவில்லை. இப்படி அடிகள் போதிக்கவுமில்லை. இதுவே தகுந்தமுறை, இதுவே நேரிய முறையென்று நம்புவோரே இதைக் கையாள வேண்டுமென்று வற்புறுத்தினர். அன்பின் சிறந்த அம்சங்களை மக்களுக்கு எடுத்து உரைத்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காந்தியடிகளும் அவர்தம் தர்ம பத்தினி கஸ்தூரிபாய் அம்மையாரும்.

தார், அவர்களுடன் வாதாடினார். இறுதிவரையும் அதன் படி ஒழுகினார். இறுதியில் தன்னைச்சுட்ட பாவியை ஒன்றும் செய்யவேண்டாமென்று கேட்டுக் கொண்டார். தற்பொழுது உலக அரசியல் துறையில் இந்தியா வெற்றி அடைந்ததென்றால், இது அடிகளின் அன்பு மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட மனப் பண்பு உள்ளவர்கள், இந்திய அரசியல் சிற்பிகளாய் இருப்பதால் தான் என்று கூறலாம். இந்தப் பண்பு மனதில் இருந்தால் உலகில் எதிரிகள் இல்லை எல்லோரும் நண்பர். இதுவே பாரதநாடு. காந்தியடிகளின், அன்பு மார்க்கத்தின் சின்னமாக உலகிற்கு அளிக்கும் அரும்பெரும் பரிசு. காந்தி அடிகளின் உள்ளத்தில் ஊற்றெடுத்த அன்பு வெள்ளமானது உலகமெங்கும் பரவி, சாந்தியையும் சமாதானத்தையும் என்றும் நிலவச் செய்வதாக!

வாழ்க காந்தியடிகளின் அன்பு நெறி.

# இலங்கையில் பட்டாசு உற்பத்தித் தொழில்

### மலிவான பட்டாசுகளால் ஏற்படும் பேராபத்து

1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்து திருத்தச் சட்டத்தில் மிகவும் புதிய அம்சமெதுவு மில்லை. 1902 ம் ஆண்டு துவக்கம் ஒரு பழைய சட்ட விதி அமுலிலிருந்து வந்தது. இச்சட்ட விதியின் கீழ் கூட 25 வருடங்களுக்கு மேலாக அலுமினியம் தூள், பொட்டாஸியம் குளோரேட் முதலியவற்றின் உபயோகம் தடை செய்யப்பட்டிருந்தது.

சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு வரை சீனப்பட்டாசுகள் ஏகபோக உரிமையை அனுபவித்து வந்தன. அதன் பின் அவற்றின் இறக்குமதி தடைசெய்யப்பட்டது. இவற்றிற்கும் கூட 1930 ம் ஆண்டு துவக்கம் அலுமினியம் பொட்டாஸியம் ஆகியவற்றின் உபயோகம் தடை செய்யப்பட்டிருந்தது. எனவே குழந்தைகளுக்கேற்படும் பாரதூரமான சேதங்களைப் பொருட்படுத்தாமல் உள்நாட்டுப் பட்டாசு உற்பத்தியாளர் 1930 ம் ஆண்டுக்கு முந்திய பயங்கரமான காலத்துக்குத் திரும்பிச் செல்லவேண்டுமெனக் கிளர்ச்சி பண்ணுவது மிகவும் நியாயமற்ற ஒரு செயலாகும்.

நூற்றுக்கணக்கான சின்னஞ் சிறு விரல்கள் சின்னபின்னமாகச் சிதறுண்டதைப் பற்றியும் அங்கங்களுக்கேற்பட்ட பங்கத்தைப்பற்றியும், முகங்கள் கூட அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வகையில் சேதத்துக்குள்ளானதைப்பற்றியும் பல துக்கச் செய்திகளைக் கடந்த இரண்டு அல்லது மூன்று வருடகாலமாக நாம் கேட்டுவந்தோம். உண்மையில், கடந்த வருடத்தில் மட்டும் 1,581 விபத்துக்கள் சம்பவித்தனவென்பதை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் நிர்வாக அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. இன்னும் எத்துணை ஆயிரக்கணக்கான விபத்துக்கள் அறிவிக்கப்படவில்லை என்பது ஒருவருக்குமே தெரியாது.

இவ்வருடம் ஜூலை மாதம் 1 ந் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட சட்டவிதியில் உற்பத்திசெய்யப்பட்ட ஒவ்வொரு பட்டாசுப் பெட்டியிலும் (பெட்டிகள் மட்டுமே விற்கப்படலாம்) உற்பத்தியாளரின் வர்த்தக அடையாளம் இருக்கவேண்டுமென்பதே புதியதெனக் கூறுவதற்குள்ள ஒரேயொரு அம்சம். **இதுதான் பிரச்னை.** சட்டத்தை மீறி பல வருடகாலமாக அலுமினியம் பெருமளவில் உபயோகிக்கப்பட்டதென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் குற்றவாளியைக் கண்டு பிடிப்பது முயற்கொம்பாகவே இருந்தது.

மேலும் சட்ட விதிகள் கடினமாக்கப்படவிருக்கின்றன வென்பதையிட்டு தங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லையென்று சொல்லக்கூட இப்பொழுது உற்பத்தியாளருக்கிடமில்லை. 18 மாத காலத்துக்குமுன், முதன் முறையாக 1956 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ந் திகதியும் பின்னர் மார்ச்சு மாதம் 9 ந் திகதியும், ஒரு சங்கத்தின் அங்கத்தவர்களெனத் தங்களைக் கூறிக்கொண்ட ஒரு கோஷ்டியினரை வெடிமருந்துக் கட்டுப்பாட்டதிகாரி சந்தித்தார்.

ஒன்று மறியாத பச்சிளங்குழந்தைகளின் சேம நலனை முன்னிட்டு எக்காரணத்தைக் குறித்தும் இனிமேல் சட்டம் மீறப்படுவதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாதென்பது இவ்விருதினங்களிலும் அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறப்பட்டது. அதே நேரத்தில், உற்பத்தியாளரும் தொழிலாளரும் தங்களை நன்கு ஸ்தாபித்துக்கொள்வதற்கு எல்லா உதவிகளைச் செய்துகொடுக்கவும் மந்திரி காரியாலயம் முன்வந்தது.

அபாயகரமான இந்தப் பொருட்களைச் சேர்க்காமல் போதியளவு சப்தத்தை ஏற்படுத்துவது அசாத்தியம் என்பதை நிரூபிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட எல்லா வாதங்களும், காதுக்குத் தீங்கு விளைவிக்காததும் விரும்பத்தக்க அளவுக்குச்சத்தத்தை யுண்டு பண்ணக்கூடியதுமான அரசாங்க இரசாயனப் பகுப்பாளரின் ஆய்கூடத்தில் தயாரிக்கப்பட்ட ஒரு பொருளைக் கொண்டு தவிடு பொடியாக்கப்பட்டன. அவ்வாறுயின் பட்டாசுகளை லாபகரமாக உற்பத்தி செய்ய முடியாதென்ற கூற்றும், கொழும்புக் கருகாமையிலுள்ள ஒரு உற்பத்தியாளரால் தயாரிக்கப்படும் பட்டாசுகளின் உதாரணத்தைக்கொண்டு முறியடிக்கப்பட்டது. உண்மையில், இவ்வுற்பத்தியாளர், அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் தயாரித்த பட்டாசைவிட அதிக சப்தமுள்ள ஒரு பட்டாசை இப்பொருளைக் கொண்டு தயாரித்தார்.

அலுமினியம் தூள் சம்பந்தமாக தாம் கொண்டுள்ள கவலையின் காரணத்தை மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த தொழில் நுட்ப ஆலோசகர்கள் பின்வருமாறு விளக்குகின்றனர். மிகவும் தரங்குறைந்த பட்டாசுகூட சிறிது அலுமினியம் தூள் இருப்பின் பெரும் வெடிச் சப்தத்தை உண்டாக்கவல்லதாகும். பட்டாசு தயாரிப்போர் இதை மட்டுமே எண்ணுகின்றனர். பட்டாசைக் கொளுத்துவோர் கதியைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை.

உள்நாட்டுப் பட்டாசுத் தயாரிப்பாளர்கள் மிகக் குறைந்த செலவில் நிறைந்த பலன் கிடைக்க வேண்டுமென்று மட்டுமே எண்ணுகின்றனர், வேறொன்றையும் நினைப்பதில்லை. இவர்கள் தொழிலாளரிடையே கிளர்ச்சி செய்தும், உபவாசங்களைத் தூண்டி விட்டும் அரசாங்

கத்தைப் பலவந்தப்படுத்தி அபாயகரமான மருந்துகளை அனுமதிக்கச் செய்வதற்கு முயல்கிருர்கள்.

சில காலத்துக்கு முன்னர் பட்டாசு தயாரிப்பாளர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமிடையே ஒரு மகாநாடு நடைபெற்றது. இம்மகா நாட்டில் அதிகாரிகள் வெளிநாட்டிலிருந்து தொழில் நுட்பம் தெரிந்தவர்களை வரவழைத்து உள்நாட்டுப் பட்டாசு தயாரிப்பாளர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்குத் தாம் தயார் என அறிவித்தார்கள். ஆனுல் பட்டாசு தயாரிப்பவர்கள் என்ன சொன்னுர்கள் தெரியுமா? "எங்கள் பாட்டன் பூட்டன் காலத்திலிருந்து இந்தத் தொழிலை நாம் செய்துவருகிருேம். எமக்கு வெளிநாட்டுத் தொழில் நுட்ப ஆலோசனை தேவையில்லை" என்று அவர்கள் கூறினுர்கள். அத்துடன் தாமே பயிற்சி நிலையங்களை ஆங்காங்கு நடத்துவதற்கும், அபாயமற்ற வெடிகளைத் தயாரிப்பதுபற்றி வகுப்புகள் நடாத்துதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் கூறினுர்கள்! ஆனுல் இன்று அவர்கள் வெளிநாட்டு தொழில் நுட்ப ஆலோசனை தமக்குக் கிடைத்துத் தாம் பயிற்சிபெறும் வரை சட்டத்தை அமுல்நடத்தாது விடும்படி கேட்கிருர்கள். அலுமினியம், பொட்டாசியம், குளோரேட் ஆகியவற்றை உபயோகியாது ஆபத்தற்ற பாட்டாசுகளைத் தயாரிக்க முடியும் என்று கூறிய இவர்கள் பொதுநலத்தை முன்னிட்டு அவ்வாறு செய்தற்கு முன்வருதல் வேண்டும். சொந்த லாபத்தை மட்டும் பார்ப்பது நல்லதல்ல.

அரசாங்க ரசாயன பரிசோதகர் தமது பரிசோதனைகளின் மூலம் ஒரு முக்கிய விஷயத்தைக் கண்டறிந்திருக்கிருர். இலங்கையிலிருக்கும் பட்டாசு தயாரிப்பவர்கள் ஆபத்தற்ற நைட்ரைட்டை மட்டும் உபயோகித்து நல்ல வெடிச்சப்தத்தை உண்டாக்கும் வெடிகளைத் தயாரிக்க முடியாதவர்களாயிருக்கிருர்கள் என்பதேயது. இதற்குக் காரணம் யாதெனில் பசளைக்குபயோகிக்கும் மலிவான நைட்ரேட்டை இவர்கள் வெடியுற்பத்திக்கு உபயோகிக்கின்ருர்கள். செலவைக் குறைப்பதற்கு இவர்கள் செய்யும் இவ்வேலையால் பட்டாசின் தரம் குறைகிறது.

கட்டுப்பாட்டதிகாரி பொது மக்களுக்கு பட்டாசுகளால் ஏற்படும் ஆபத்துக்களைப்பற்றி ரேடியோமூலம் சில சொற்பொழிவுகளை விஷயமறிந்தவர்களைக்கொண்டு நடாத்துதற்குத் திட்டமிட்டிருக்கிருர். பட்டாசு கொளுத்தும் விஷயத்தில் பொதுமக்கள் பெரும் போட்டிகளை நடாத்த முற்படுவதில் உள்ள ஆபத்துக்களைப்பற்றியும் இப்பேச்சுகளில் பேச்சாளர்கள் எடுத்துக் கூறுவார்கள். ஆபத்தான வெடிகளை உபயோகித்தலால் ஏற்படும் கஷ்டங்களையும் அவர்கள் விளக்குவார்கள்.

## கல்லோயாப் பள்ளத்தாக்கு.......

(21 ம் பக்கத்தொடர்ச்சி)

**அவள்**

வாடக்காத்துப் பெயர்ந்து நீலவான மிருண்டு பொழிஞ்சவுடன்
வாய்க்கால் வெள்ளம் பரவிவரும் நேசமச்சான்! நம்ம
வயல்கள் மூழ்கி அழிஞ்சிபோகும் ஆசமச்சான்.

**அவன்**

குமுறியோடும் ஆத்தமறிச்சி குறுக்குஅணை கட்டினவர்
குடிகள் கஷ்டம் தீத்திடுவார் செல்லக்கண்ணு! ஒரு
குறையுமின்றி வாழ்ந்திடுவோம் சின்னக்கண்ணு!!

**அவள்**

காட்டுப்பூமி வெட்டித்திருத்தி காணியாக மாத்திப் போட்டம்
நாட்டும் நாற்று ஓங்கிவளரும் நேசமச்சான்! நெல்லு
மூட்டை கட்டிச் சேத்திடுவோம் ஆசமச்சான்!!

**அவன்**

நெல்லுப்போகம் முடிய சோளன் வெல்லம் விளையும் கரும்புகுரக்கன்
எல்லாப்பயிரும் விளைத்திடுவஞ் செல்லக்கண்ணு! எங்கள்
ஏர்முனையால் செல்வங் கொள்வஞ் சின்னக்கண்ணு.

வேறு

தரு—தந்தானந் தனத் தனதந்தினு—தந்தனத்
தானு தன தந்தினு.—

1. குடியிருக்கும் வீட்டின் முன்னே குன்றுபோல சூடுவச்சி
மிடியரக்கன் தொல்லையின்றி மேன்மையுற வாழ்ந்திடுவோம்.
2. குடியேற்ற வாசிகள்நாம் கூட்டுறவுப் பண்ணை
செய்தே, அடைமழைக்குச் சாப்பிடவே அட்டுவத்தில் கட்டிடுவோம்
3. நெளிஞ்சோடும் வாய்க்கால்களில் நிறைஞ்சோடும் நீர்வளத்தால்
விளைஞ்சாடும் வயல்களைநாம் வெட்டிக்கட்டிச் சேர்த்திடுவோம்.
4. காடழித்தே களனிசெய்வோம் கரும்புநட்டே சீனி செய்வோம்
5. மாடுகன்று வளர்த்தவற்ருல் மாருச்செல்வம் பெற்றிடுவோம்.

ஆருேடும் பரழகை அகிலமெங்கும் காட்டிடுவோம்
ஏரோடும் எருதோடும் ஏற்றமுற வாழ்ந்திடுவோம்.

—முற்றும்—

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் செலவு சதம் |
|---|---|---|---|
| 1. | இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 .. | 10 |
| 2. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. | 50 .. | 15 |
| 3. | அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. | 1.20 .. | 35 |
| 4. | இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் .. | .70 .. | 15 |
| 5. | இந்து மத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. .. .. | 2.00 .. | 35 |
| 6. | இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. .. | 5.00 .. | 35 |
| 7. | 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. | 1.45 .. | 35 |
| 8. | இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. .. | 2.00 .. | 35 |
| 9. | சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. .. | 1.55 .. | 35 |
| 10. | குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலிக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. | 60 .. | 20 |
| 11. | இலங்கைப் பறவைகள்—சித்திரசகித நூல் .. .. | 5.00 .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,
தபால் பெட்டி நிர். 500,
கொழும்பு 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

*தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*